# மந்திர வலை

## 1

மழை வரும் போல் இருந்தது.

மேகப் பொதிகளுக்கு நடுவே டாக்டரின் பிரிஸ்க்ரிப்ஷன் எழுத்துப்போல கோண மாணலாய் மின்னலாய் மின்னல்!

இடிச் சப்தத்துக்கு குறைவில்லை.

கடிகாரத்தைப் பார்க்கிறார் சந்திரசேகர்.

மணி பதினொன்று ஐம்பது.

பத்து நிமிஷத்தில் மயானத்துக்கு போய்விடலாம் தான். பியூஜியோ காரில் போகக் கசக்குமா என்ன?

ஆனாலும் சற்று பயமாய இருக்கிறது அவருக்கு.

பயந்தால் காரியம் நடக்காது என்று பத்மநாப பிள்ளை சொன்னது ஞாபகத்துக்கு வருகிறது.

"சதுர்வேதியை ஜெயிக்கணும்னா இதாங்க வழி. யோசிச்சிங்கன்னா, யோசிக்கற அந்த நேரத்துல இன்னும் நாலு பார்ட்டிய சதுர்வேதி தன் வசப்படுத்திடுவான்."

இதற்குள் பிள்ளையே வந்து விடுகிறார்.

கைலி, சட்டை என்று படு ஹோம்லி லுக்!



"என்னய்யா இது பாத்ரூம்க்கு குளிக்க போறவன் மாதிரி...?"

"பாத்ருமுக்கு நான் இதைவிட நல்ல டிரஸ்ஸோட போவேன், சுடுகாட்டுக்கு போறதுக்கு இது போதாதா என்ன?"

"ஏய்யா கட்டாயம் சுடுகாட்டுக்கு போய்த்தான் நிறணுமா?"

"என்னங்க நீங்க. விடிய விடிய கதை கேட்டும் சீதைக்கு ராமன் சித்தப்பாங்கற மாதிரி..."

"அப்ப சரி உங்க இஷ்டம். நான் வரேன். வியாபாரத்துல ஜெயிக்கறத பத்தி மட்டும் இனி என்கிட்ட எதுவும் நீங்க கேக்கக் கூடாது. அத மட்டும் ஞாபகத்துல வெச்சுக்குங்க."

பத்மநாப பிள்ளை மாட்டிய கொக்கியில் வசமாய் மாட்டிக் கொண்டது போல் மௌனம் காக்கிறார் சந்திரசேகர்.

"என்ன பேசமாட்டேங்கறீங்க... நான் கிளம்பறேன்."

"நில்லுய்யா..." சொன்ன கையோடு அறைக்குள் நுழைந்து கறுப்பு வேட்டி சட்டை என்று பிள்ளை சொன்ன மாதிரியே சந்திரசேகர் வெளியே வந்த போது பிள்ளை முகத்தில் காவிப் பல் வெளித் தெரியும் சிரிப்பு.

"கிளம்பலாமா?"

-வெளிறின முகத்தோடு பின் தொடருகிறார் சந்திரசேகர்!

சந்திர சேகர்...

மாமதுரையின் முதல் பத்து பணக்காரர்களில் ஒருவர்.

முப்பத்து ஐந்து வயதுதான் ஆகிறது.

பார்க்க கபில் தேவ் சாயல்!

ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம்.

ஐம்பதுக்கு ஐம்பது லாபம் தரும் எந்த பிசினஸாக இருந்தாலும் சரி... மனிதர் வளைத்துப் போட்டு விடுவார். ஆபீஸ் பைக்காரா அழகு சுந்தரம் நகரில் இருக்கிறது. அறுநூறு பேருக்கு மேல் வேலை பார்க்கிறார்கள். சந்திரசேகர் அறையில் இருந்து பார்த்தால் திருப்பரங்குன்றம் மலை தெரியும்.

'முருகா' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டுதான் அரிப்பெடுத்த இடத்தைக் கூட சொரிந்து விட்டுக் கொள்வார். அவ்வளவு முருக பத்தி.

ஜேசீஸ், லயன்ஸ். சேம்பர் ஆஃப் காமர்ஸ் என்று பணக்கார அமைப்புகளில் தலைவராய் இருந்த அனுபவத்தோடு நியமன உறுப்பினராக ராஜ்யசபாவுக்கும் போய் வந்தவர்.

தும்மினால் கர்ச்சீப், விக்ஸ், அமிர் தாஞ்சன் என்று ஆளுக்கொரு மருந்தோடு கை நீட்ட ஒரு பட்டாளமே உண்டு.

ஆனால் நிம்மதியை நீட்டத்தான் யாரும் இல்லை. இந்த நிம்மதி ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு விதத்தில் போகிறது. சந்திரசேகருக்கு சதுர்வேதியால் போனது.

சதுர்வேதி... ஆந்திரக்காரன்! சினிமாப் பட தயாரிப்பாளராய் ஒன்ஸ் அபான் எ டைம் இருந்தவன். இப்பொழுது சந்திரசேகருக்கு வியாபாரத்தில் போட்டிக்கு வந்திருக்கிறான். சந்திரசேகரின் விசுவாச பார்ட்டிகளைக் கூட எப்படியோ தன் பிஸினஸ் பக்கம் வளைத்து விட்டான்.



...க்கும் அவன் சரக்கு ஒன்றும் ISI சரக்கில்லை ...ரோ ISIயுடன், என்னென்ன சர்ட்டிபிகேட்டுகள் ...டா அவ்வளவையும் வாங்கி வைத்துக்கொண்டு ... செய்பவர்.

...ர்வேதியை விட சரக்கை விலை குறைத்து ...ந்தாலும் பார்ட்டி இந்தப் பக்கம் திரும்ப மாட்டேன் ...றது.

...து எப்படி சாத்யம்?

...ர்க்கெட்டிங் மேனஜர் ஒரு விதமாய் சொன்னார்.

"சார், சதுர்வேதிக்கு பிசினஸ் பண்ணி லாபம் ...ந்திக்கிறது நோக்கம் கிடையாது. நம்ம பிஸினஸை ...யில் பண்ணணும். அது ஒண்ணுதான் நோக்கம்."

ஜெனரல் மேனேஜர் ரங்கநாத் வேறு காரணத்தைக் ...ினார்,

"அவன் மத்த பார்ட்டிகளுக்கு நம்மளை விட மலிவா ...க்கு சப்ளை பண்றதோட பொம்பளை தண்ணின்னு ...ளை பண்றான் சார்! சபரி அன்கோ பார்ட்டிக்கு பிளாட் ...ங்கி கொடுத்திருக்கான். காந்தி என்டர் பிரைசஸ் ...ருக்கு டிக் லோனுக்கு ஏற்பாடு பண்ணி கொடுத் ...ருக்கான். நடுவுல யார் போய் எவ்வளவு கேட்டாலும் ...யிரம் பத்தாயிரம்னு அள்ளி எரியறான். எனக்குகூட ...லை வெச்சான் சார். நான் லாயலா இருக்க ஆசைப் ...டறேன் போடா பொறுக்கின்னுட்டு வந்துட்டேன்."

இதையெல்லாம் கேட்ட சந்திரசேகருக்கு பக்கென்று ...னது. வியாபார உலகில் எவ்வளவோ எதிரிகள். ஆனால் ...வாழ்வில் அவர் இப்படி ஒரு எதிரியை சந்தித்ததேயில்லை.

இவன் ஒரு தினுஸான எதிரி.

இவன் வியாபாரியா? சர்வ நாசக்காரனா? யார் இவ... ஆரம்பிச்ச போது தான் பத்மநாப பிள்ளை முன் வந்தா... "சார் நான் ஒரு வழி சொல்றேன் செய்வீங்களா." என்று பீடிகை போட்டார்.

"என்னய்யா?"

"எனக்கு தெரிஞ்ச ஒருத்தர் இருக்கார். அவரைப் போய் பார்த்தா எல்லாம் சரியாயிடும்."

"யார் அவர்... கடவுளா?"

"கிட்டதட்ட அப்படித்தான்..."

"என்னய்யா சொல்றே?"

"ஆமாம் சார்... லைப்ஃலே ரொம்பவும் தடாலடியா தட்டிக் கேட்க முடியாத மாதிரி போறவங்களுக்கு நாம் சொல்ற கடவுள் தான் சரியான ஆள்."

"அந்த கடவுளோட பேரு?"

"தத்தாத்ரேய பட்டத்திரி."

"பேரை கேட்டா மலையாள வாடை வீசுதே?"

"மலையாளி தான். அங்க தானே இன்னிக்கும் ஏவல் தேவதை உபாசனை இருக்கு."

"அப்படின்னா?"

"அப்படின்னா அப்படித்தான். நான் என்னத்த சொல்ல! மொத்தத்துல பட்டத்திரியை பார்த்தா உங்க பிரச்சினைக்கு முடிவு தெரிஞ்சிடும்."

"மூளையைக் கொண்டு, பிசினஸ் பிளான், டார்கெட் அலேர்ட்நெஸ், மெய்ன்டனன்ஸ்னு, யோசிச்ச ஸ்ட்ராட்டஜில் போட்டு பிசினஸை டெவலப் பண்ணினா பிரச்சினை தீரும். அதுக்குத் தானே M.A, M.B.Aன்னு படிச்சவங்களை வேலைல வெச்சு பத்தாயிரம், பதினைஞ்



...ரம் சம்பளம். உக்காந்தா அலவன்ஸ், நின்னா ...ன்னு தரேன். இவங்களால தீர்க்க முடியாததை ...த்திரி தீர்ப்பார்ன்னு சொல்றியே? சுத்த முட்டாள்யா நீ."

"நான் முட்டாள் இல்லை... நீங்கள் உங்கள் ஸ்ட்ராட்டஜியெல்லாம் சதுர்வேதிகிட்ட பலிக்காது. அவன் ஸ்ட்ராட்டஜில தான் இப்ப நாம பிஸினஸே சுருண்டு படுத்துக்கிட்டிருக்கு. என்னங்க பெரிய M.A, M.B.A? பட்டத்திரியோட ஒரு மந்திரம் போதும் இந்த M.A, M.B.A.க்களை சட்டையை கிழிச்சுட்டு ஓட வெச்சுடும்."

"நிஜமாவா? என்னய்யா என்னவெல்லாமோ சொல்றே? நீ சொல்றது உண்மைன்னா எல்லா கம்பெனியிலையும் மாந்திரீகர்கள் தான்யா ஜெனரல் மேனேஜரா இருப்பான்?"

"இப்படி கேள்வி கேட்டுகிட்டேயிருந்தா நாம தேற முடியாது. எனக்கு தெரிஞ்ச சதுர்வேதி வேகமா முன்னுக்கு வரக்காரணமே அவன் மாந்திரீகத்தை நம்புனதால தான்."

"இது உனக்கு எப்படி தெரியும்?"

"எப்படியோ தெரியும். அதப்பத்தி உங்களுக்கு என்ன அவன் நமக்கேதிரா பண்ணின விஷயத்துக்கு பதில் விஷயம் ஒன்னு நாம பண்ணனும்-பண்ணிட்டா தப்பிச்சிடலாம்."

"நீ சொல்றது என்னால நம்ப முடியலைய்யா..."

"நம்ப வைக்கறேன். என்கூட சுடுகாட்டுக்கு வாங்க."

"சுடுகாட்டுக்கா?"

"ஆமா... கண்ணமங்கலக் காக்காயன் சுடுகாட்டுக்கு... ஐயாயிரம் வருஷத்து சுடுகாடு அது முன்னூறு தலைமுறைகளை பார்த்த சுடுகாடு! சராசரியா ஒரு நாளைக்கு நாலு பொணமாவது வெந்துகிட்டிருக்கும். அந்த பூமியில மட்டும் லட்சக்கணக்கான பிணங்கள்

புதைக்கப்பட்டிருக்கு இந்த பூமி உருண்டைல அந்த சுடுகாட்டு மண்ணோட குணமே தனி!''

''அங்க போய் நாம என்ன பண்ணப் போறோம். யோவ் திகிடு தம்பா எதுலையாவது சிக்க வெச்சுடாதே.''

''சார்... நான் உங்க உப்பை தின்னு வளர்ந்தவன். எனக்கு நம்ப நிறுவனம் தான் பெரிசு. அது நல்லா இருந்தா தான் நாம நல்லா இருக்க முடியும். இந்த சதுர்வேதி ஒரு குள்ள நரி. குணம் கெட்டவன். இவன் மாதிரி நபர்கள் உயிரோடயே இருக்கக்கூடாது. இவன் மாதிரி ஆட்களால் நம்ப நிறுவனம் தாழ்ந்து போறத என்னால பாத்துகிட்டு சும்மா இருக்க முடியாது.''

பத்பநாப பிள்ளை போட்ட போடில் சந்திரசேகருக்கு நம்பிக்கை வந்துவிட்டது.

இதோ அவரை சுடுகாடு வரை இழுத்து வந்து விட்டது!

## 2

அமைதிக்கு இலக்கணம் சொல்லிக் கொண்டிருந்தது அந்த சுடுகாடு. பத்து ஏக்கர் பரப்பளவு-நூற்றுக் கணக்கில் மேகத்தை உரசுமளவு வளர்ந்து விட்ட மரங்கள். தரைப்பரப்பு முழுக்க திட்டுத்திட்டாய் சமாதிகள். காய்ந்த மாலைச் சருகுகள், உடைத்து போட்ட பாடை மூங்கில் குழாய்கள், தென்னந்தோகைகள்.

அமோக மகசூலில் எருக்கஞ் செடியும் ஊதாநிற பூ பூத்த செடிகளும்... போன நூற்றாண்டு சமாதியெல்லாம் கூட கல்வெட்டுக் குறிப்போடு கிடந்தன.

அந்த சுடுகாட்டுச் சுழலும்-பம்ம் என்று காதை இழுக்கும் ஒரு விதமான மௌனமும் சந்திரசேகரை பிறாண்டிக் கொண்டிருந்தது.



...னால் துளிகூட பயமின்றி பத்மநாப பிள்ளை காரை ...ட்டு வெளியிலேயே நிறுத்தி விட்டார். அவர் கார் ...ற இடத்துக்கு சற்று தள்ளி இன்னொரு கார். கறுப்பு ...யோட்டோ!

...பார்த்த மாத்திரத்திலேயே அது சதுர்வேதியின் கார் ...று தெரிந்து விட்டது.

...பத்ம நாப பிள்ளை உடனேயே சந்திர சேகரை பார்த்து ...ரித்துப் புன்னகை பூக்கிறார்.

"நான் அப்பவே சொன்னேன்ல...'' என்கிற பாவனை ...த்தில்.

"யோவ் என்னய்யா இது. நமக்கு முந்தி இந்த சதுர்வேதி ...ங்க வந்திருக்கான்...?''

"மெல்லப் பேசுங்க. உள்ள வந்துப் பாருங்க. இன்னும் ...திர்ச்சிங்க உங்களுக்கு காத்திருக்கு...''

...பிள்ளையின் பீடிகையோடு சந்திர சேகரின் உடம்பில் ...டுக்கம் பரவுகிறது.

சுடுகாட்டை ஏறிடுகிறார்.

அத்தனை மரங்களில் ஒன்றிகூட அசைவுமில்லை. ...காற்றுக்குகூட சுடுகாட்டுப்பக்கம் வந்து வீச ...இஷ்டமில்லையோ?

''யோவ் பத்மநாபபிள்ளை... எனக்கு பயமா இருக்குய்யா. முட்டாள்தனமா நான் ஏதோ பண்ணிக்கிட்டிருக்கா மாதிரி ஒரு ஃபீலிங் வேற...''

''என்னங்க நீங்க... இவ்வளவு தூரம் வந்துட்டு இப்படிப் பேசறீங்க, பயமா இருக்குன்னும் சொல்றீங்க, முட்டாள் தனம்னு சொல்றீங்க, முட்டாள்தனமா விஷயத்துல பயப்பட ஒண்ணுமில்லியே.''

"எனக்கு சொல்லத்தெரியலை. ஒரு எம்.டி. இப்படி எல்லாம் சுடுகாடு அது இதுன்னு விஞ்ஞான யுகத்துல நடக்கறது நல்லதுக்கா?"

"பேசாம வாங்க. விஞ்ஞான யுகம் அது இதுன்னுகிட்டு. என்னாங்க பெரிய விஞ்ஞானம், வந்து பாருங்க உங்க விஞ்ஞானத்தை பட்டத்திரி கைப் பந்தா வெச்சுக்கிட்டு விளையாடிக்கிட்டிருக்கறதை..."

பிள்ளை விடுவதாய் இல்லை. இருவரும் சுடுகாட்டின் இடிந்த மதில் சுவரைத்தாண்டி உள்ளே கால் எடுத்து வைக்கிறார்கள்.

சருகுகள் மதிபட்டு சரசரத்து சப்தம் போடுகின்றன. அதுதான் சந்திரசேகர் கேட்ட முதல் சப்தம், இதயம் அதன் காரணமாக ஒரு கரணம் அடிக்கிறது. பிள்ளையின் கையில் டார்ச் லைட். ஆனால் அதை அவர் பயன்படுத்தவில்லை.

வானில் அரைச்சந்திரன்.

இலேசான வெளிச்சம்.

நடப்பதற்கு தடை இல்லாத சூழ்நிலை.

சுடுகாட்டின் எரிமேடை மிக உள் அடங்கி இருக்கிறது. பாதை வளைந்து வளைந்து செல்லும்.

பாதை ஐந்தடி அகலம் இருந்தால் அதிகம்.

பாதை ஓரமெல்லாம் பிணச் சமாதிகள்.

சந்திரசேகர் பல நேரங்களில் சமாதிகள்மேல் ஏறிவிட்டு பயந்துபோய் கீழே குதித்து வியர்க்கிறார். விறு விறுக்கிறார்.

வலிய வந்து துன்பம் அனுபவிப்பதாக நினைத்துக் கொண்டு சுயவருத்தம் கொள்கிறார்.

அதை பன்மடங்கு பெரிதாக்குவதுபோல் குடைந்தபடி உள்நுழைகிறது ஊளைச்சத்தம் ஒன்று.



"யோவ் என்னய்யா இது சப்தம்...?"

"நரியோட ஊளைச் சப்தங்க..."

"இங்க எங்கய்யா நரி?"

"இங்க தான் நரிவரும்... புதைச்சுட்டு போற பிணங்களை இழுத்துப்போட்டு திங்க வருங்க..."

"அது எப்படிய்யா முடியும்?"

"வாங்க காட்டறேன்..."

சொன்னபடியே பிள்ளை சில நொடிகளிலேயே அதை காட்டிவிட்டார். சற்றுதொலைவில் ஒரு மரத்தடியில் தொகுப்பாய் நான்கைந்து நரிகள் சமாதி மேட்டை பிராண்டி காலால் மண்ணை இழுத்து வெளியே தள்ளிவிட்டு உள்ளே உள்ள உடம்பின் கழுத்துப் பகுதியில் வாயை வைத்திருந்தன.

டார்ச் லைட் வெளிச்சம் படவும் அந்த நரிக்கூட்டம் சிலிர்த்து அப்படியே நிற்க அதன் விழிகளில் வைரம்போல் பளபளப்பு.

'வாவ்!' வாய் பிளக்கிறார் சந்திரசேகர். ஒளி வட்டத்தில் பிணம் தெரிகிறது. தலை கத்திரிக்கப்பட்டு தனியாக மரத்தில் இருந்து விழுந்த தேங்காய் கணக்காக ஒதுங்கிக் கிடக்க கழுத்து தோள் பட்டையெல்லாம் ஒரே குதறல்!

சந்திரசேகர் விதிர்த்து நிற்க பிள்ளை ஒரு காலால் கீழே தடவி மணற்கட்டி ஒன்றை எடுத்து அந்த நரிக் கூட்டம் நோக்கி வீச நரிகள் நாலாப்பக்கமும் சிதறிப் பிரிந்தன.

"யோவ் பிள்ளை வாய்யா போயிடலாம்... பயமா இருக்கு..."

"பயப்படாதீங்க... எச்சிலை போட்டா நாய் வர்றதில்லையா அந்த மாதிரிதான் இதுவும், இந்த முனிசிபாலிடிகாரங்க அனாதை பொணங்களை ஆழமா

குழி தோண்டிப் புதைக்கமாட்டாங்க. அதான் மோப்பம் பிடிச்சு வந்து இப்படி பண்ணிடுதுங்க. மற்றபடி நம்மலை ஒண்ணும் பண்ணாது வாங்க...''

சந்திரசேகர் பயத்துடன் அந்த குதறலான பிணத்தை கடக்கும்போது கண்களை இறுகமூடிக் கொண்டார். ஒரு தினசான வாடை மூக்கை நிரடியது. தாண்டி நடக்கவும் புகை வாசம்.

கூடவே பார்வைக்கு தென்படும் தொலைவில் திகுதிகுவென்று தீ! அந்த தீக்கு அருகில் இரண்டு பேர் நிற்பது தெரிகிறது.

அதில் ஒருவன் பட்டத்திரி.

அடுத்த நபர் சதுர்வேதி.

பிள்ளையும், சந்திரசேகரும் மரம் ஒன்றின் பின்னால் ஒளிகிறார்கள்.

“சார்... அவங்க கண்ணுல படாம நடக்கறதை பார்ப்போம்.'' பிள்ளையின் கருத்துக்கு ஏற்ப சந்திரசேகர் பார்க்கத் தொடங்க.

திகுதிகு ஒரு பிணத்தின் எரியூட்டல் என்பது தெரிகிறது.

சதுர்வேதி கையில் ஏதோ ஒரு பொருள் கறுப்புத் துணியால் மூடப்பட்டிருக்கிறது. அந்த பொருளுடன் சதுர்வேதி எரியும் பிணமேடையை கல்யாண மேடையைப் போல் சுற்றி வரத் தொடங்குகிறான்.

என்ன இதெல்லாம்?

“சார்... வாங்க திரும்பி நடங்க... சீக்கிரமா வெளியே போய் நாம காரை எடுப்போம். நாம இங்க பட்டத்திரியை பார்க்க வந்துருக்கிறது சதுர்வேதிக்கு தெரியக் கூடாது. வாங்க கமான் க்விக்!''



பேசினபடியே பிள்ளை ஓடினார். சந்திரசேகரும் பின் தொடர்ந்தார்.

எல்லாம் நொடிகளில் நடக்கிறது.

காரில் ஏறி ஸ்டார்ட் செய்து காரை பின்னுக்கு செலுத்தி... அப்பப்பா சதுர்வேதி பார்வையில் இருந்து மறையப்பட்ட பாடு இருக்கிறதே...

## 3

“வாங்க... இப்ப தைரியமா, உள்ள போய் பட்டத்ரிய பார்க்கலாம்...'' மீண்டும் சுடுகாட்டு வாசலில் பத்மநாப பிள்ளை.

ஓரளவு தீர்க்கமுடன் சந்திரசேகரும் கூட....

“யோவ் பிள்ளை. சதுர்வேதி இங்க எதுக்கு வந்தான்... என்ன பண்ணிட்டு போறான்?''

“வந்து பட்டத்திரிய கேட்டுப் பாருங்க சொல்வாரு.''

-இருவரும் உள்ளே நடக்கிறார்கள்.

“உனக்கு பட்டத்திரி பழக்கமா?''

“சுமாரான பழக்கம்.''

“அதுசரி... சதுர்வேதிக்கு உதவி செய்யற அந்த பட்டத்திரி நமக்கு செய்வானா?''

“செய்ய வைக்கணும். பட்டத்திரி ஒரு வித்தை தெரிஞ்ச மாந்திரீகன். நம்பி வர்றவங்களுக்கு அவன்தன் வித்தையை பயன்படுத்தித் தான் தீரணும். சதுர்வேதி கொடுத்த விலையைவிட கூடுதலான விலை கொடுத்தா நிச்சயம் நமக்கும் செய்வான். ஆனா நாம கூடுதல் விலை கொடுக்காமலே காரியத்தை சாதிச்சுக்கலாம்.''

''எப்படிய்யா?''

''முதல்ல பட்டத்திரிய சந்திங்க. நான் பிறகு சொல்றேன். எந்த நிலையிலையும் நீங்க சதுர்வேதியை உங்களுக்கு எதிரின்னு சொல்லிடாதீங்க.''

''நண்பன்னு சொல்லணுமா?''

''அப்படியும் சொல்லாதீங்க.''

''குழப்பறய்யா... என்னன்னு சொல்லனும்?''

''என் பிசினஸ் டெவலப் ஆகனும் அதுக்கு தடையா இருக்கிற விஷயங்கள் ஒழியணும்னு சொல்லுங்க...''

பிள்ளை சொல்லும் போதே ''ஆரானு அவ்விட...'' என்கிற ரௌத்ரமான குரல். பட்டத்திரி தான் வந்து கொண்டிருந்தான் எதிரில்.

கருப்பு உத்திரியம்.

சந்தனப் பொட்டு.

கழுத்தில் விரல் எழும்பு மாலை!

இடுப்பில் பஞ்சலோக சம்படம்-அதில் கருப்பாய் மைக் கலவை.

காலில் கட்டைச் செருப்பு.

மெல்விருட்டில் இத்தனை பேயலங்காரங்களும் தொலைவில் எரியும் நெருப்பில் உணர முடிந்த தினுசில் தெரிகிறது.

''நமஸ்காரம் பட்டத்திரி...''

''ஆரது... நமஸ்காரம் பறையின்னது. இமயானத்தில் ஙிங்களுக்கு ஜோலி எந்தா...?''

''பட்டத்திரிய பார்க்கத்தான் வந்தோம்.''

''ஞான் இவ்விட உண்டுன்னு எங்கன அறியும்?''



''சதுர்வேதி சொல்லியனுப்பினார்.''

''எந்தா சதுர்வேதியோ... ஆயாளு எண்டயிடத்தில் பறையில்லையே...''

''அதுக்கு நாங்க என்ன செய்ய முடியும் பட்டத்திரி. பட்டத்திரி ஒரு மகான்-அவரைப் போய் பாருங்க உங்க பிரச்சினை தீரும்னு சொல்லி...''

''சரி... எந்தா வேணு-பறையோ.''

''சார் ஒரு பிஸினஸ் மேன். இவருக்கு வியாபாரத்துல பயங்கர நஷ்டம்.''

''கைவசம் ஜாதகம் உண்டோ?''

''இல்ல... கொண்டு வரலை. ஆனா நட்சத்திரம் ராசியெல்லாம் தெரியும்.''

''எந்தா நட்சத்திரம்?''

''உத்திரட்டாதி...''

பட்டத்திரி அதுவரை நின்று பேசியது போதும் என்பதுபோல் திரும்பி நடந்தான். ஓரிடத்தில் பெரிய அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அருகில் ஒரு பெண் சடலம். சடலம் மேல் மெல்லிய கறுப்புத் துணி.

சடலத்தின் வயிற்றின் மேல் போய் ஏறி அமர்ந்தான்.

சந்திரசேகரும், பிள்ளையும் அதைப் பார்த்து பெரிதாகவே பயந்தார்கள்.

பட்டத்திரியின் கண்கள் இப்பொழுது செருகிக் கொள்கின்றன. பெருமூச்சு வருகிறது. மார்பில் இரைப்பு.

சட்டென்று அவ்விளக்கு அணைந்து போனது.

கும்மிருட்டு வந்து கூத்தாடியது.

கூடவே ஒரு அழுகைச் சப்தம் கேட்டது.

முறைவைத்து விசும்பி அழுகின்ற மாதிரி சப்தம் கேட்டது. எங்கிருந்து வருகிறது சப்தம்? யாரிடமிருந்து வருகிறது சப்தம்? புரியாத புதிருக்கு நடுவில் “எடி யட்சி எந்தா இது கரையின்னது. வரு... வரு... வரு...” என்று இடி இடிப்பதுபோல் பட்டத்திரி கத்துவதும் கேட்கிறது.

அந்த சப்தமும் நின்று போனது-அமைதி.

நெடுநேரம் நிலவிய அந்த அமைதி சந்திரசேகரை நொறுக்கி எடுத்தது.

“யோவ் பிள்ளை என்ன நடக்குது இங்க.”

“பட்டத்திரி தன் உபாசனை தேவதைகிட்ட நமக்காக பேசிக்கிட்டிருக்கான்.”

“சத்தமே கேக்கலையே...”

“நம்ம காதுல விழாதுங்க. அது மாந்திரீக பாஷை.”

“என்னென்னமோ சொல்றே-எனக்கோ ஒரே டெர்ரரா இருக்குய்யா...”

“பொறுங்க பொறுங்க.”

பட்டத்திரியிடம் இப்பொழுது அசைவு தெரிந்தது. “ஏடோய் துரோகி” என்கிற ஆவேசம் வேறு குரலில்.

“என்ன பட்டத்திரி...?”

“என்ன பட்டத்திரியா? கள்ளா... நீ சதுர்வேதியோட எதிரி...”

“என்னது சதுர்வேதியோட எதிரியா... சேச்சே... அப்படியெல்லாம் இல்லையே.” பதறினார் பிள்ளை.

“கள்ளம் பறையாதே-எண்ட யட்சி சகலமும் பறைஞ்சு. பிள்ளை அதைக் கேட்டு நிஜமாலுமே நடுங்கினார்.

“யட்சி மேல அவ்வளவு நம்பிக்கையா?” கேட்டார்.



“துரோகி-யட்சி எண்ட கூட்டுக்காரி. யட்சி எண்ட [ஸ]்வாசி. முன்னூறு வருஷங்களாய் எண்ட பரம்பரையட்சிய [கொ]ண்டு ஜீவிக்குன்னது. யட்சி பறைஞ்சிட்டெங்கில் அதில் [சத்]யும் உண்டு அறியோ? யட்சி ஒரு தேவ கண்ணியாணு.”

“பட்டத்திரி நீ யட்சிய நம்பற அளவு நான் உன்னை நம்பி இவரை கூட்டிக்கிட்டு வந்துருக்கேன். சிவனேன்னு வியாபாரம் செய்துகிட்டிருந்தவரை போட்டிக்கு-இழுத்தவன் அந்த சதுர்வேதி தான்-இவர் இல்ல... சதுர்வேதி உனக்கு தர்றதைவிட இவர் கூட பணம் தருவார். நீ இவருக்கு உதவியே தீரணும்.”

தப்பித் தடுமாறி பிள்ளை அழுத்தமாக பேசி முடிக்கவும் பட்டத்திரி முகத்தில் லேசான சாந்தம் வந்து பரவியது. பெருமூச்சு வந்து தாடி மீசையில் சிதறியது.

என்ன நினைத்தானோ திரும்பவும் போய் அந்த பெண் பிணத்தின் மேல் போய் அமர்ந்து கொண்டான். கண்களை இடுக்கி யட்சியை கூப்பிட்டான்.

கைகளை பாம்பைப் போல பிணைத்துக் கொண்டான். படாதபாடு என்பார்களே-அதெல்லாம் பட்டான்.

சட்டென்று அகல் விளக்கு யாரோ ஏற்றியதுபோல் சுடர் விட்டது. களேபரச் சிரிப்பும் கூடவே கேட்டது.

“யட்சி எந்தா இது சிரிக்குன்னது?” என்ற கேள்வி பட்டத்திரியிடம் சிரிப்பு தொடர்ந்தது.

“யட்சி நிஜம்பற... எந்தா சிரிக்குன்னுது. கள்ளன் மகளே.”

“நான் கள்ளன் மகளல்ல. நான் கள்ளன் மகளல்ல. நான் கள்ளன் மகளல்ல!”

அழுகையும் வீம்புமாய் ஒரு பெண் குரல் எங்கிருந்து? எப்படியது?

"எங்கில் நிஜம் பற. சத்யம் பற. ஆ சதுர்வேதி கள்ளனோ?"

"அதே."

"இ ஆளு?"

"இவன் சத்யசந்தன். உத்தமன் குமரன், சிரேஷ்டன் ஸ்ரீவித்யன்."

"செரி... செரி. நீ போய்க்கோ."

"எனிக்கு ஊணு!?"

-பட்டத்திரி அடுத்த நொடியே இடுப்புக்கத்தியால் தன் தொடையை ஒரு கீறு கீறினான். ரத்தப் பாய்ச்சல் ஏற்பட்டது.

ரத்தம் பெண் சடலத்தின் மேல் கறுப்புத் துணி நனைய ஒழுகியபடி ஓடியது.

ஓடிய நொடியில் யாரோ நக்கிக் குடிப்பது போல் காணாமலும் போனது.

சந்திரசேகர் அதைப் பார்த்து மிரட்சியின் உச்சாணிக்குப் போனார். இப்படிக் கூட நடக்க முடியுமா? என்கிற கேள்வி போர்டு எழுதி மாட்டிக் கொண்டு அவர் கழுத்தில் தொங்கியது.

பட்டத்திரி தொடையை கறுப்புத் துணியால் பட்டிக்கட்டிக் கொண்டு நிமிர்கிறான். சந்திரசேகரை பார்க்கிறான்.

"நான் உனக்கு சகாயம் செய்யும்." என்கிறான்.

"அதை இப்பவே செய்யணும். நாளைக்கு ஐம்பது லட்சரூபா சரக்கை டெலிவரி அனுப்பணும். அது பிரச்சினை இல்லாம போய் பணம் வந்து எல்லாம் நல்லபடியா முடியணும்."



பட்டத்திரி இடுப்பில் கைவிட்டான். ஒரு மை டப்பா வந்தது.

"இது வெள்ளெருக்கு மை. இத சரக்கு மேல லேசா தடவி அனுப்பு. நீ நினைச்சதுக்கு மேல ஜெயமாகும்."

"அந்த சதுர்வேதிய..."

"அவனை நான் பார்த்துக்கறேன்."

அதற்கு மேல் அங்கு நின்று பேசி பொழுதை வீணாக்காமல் இருப்பதற்காக திரும்பினவர்கள் பட்டத்திரியின் குரல் தடுத்தது.

"சந்திரசேகர்."-குரலை கேட்டு திரும்பினார் சந்திரசேகர்.

"நீங்க இடத்தில் வளர சொர்ணம் உண்டோ?"

பட்டத்திரியின் கேள்வி புரியாது விழிக்கும் சந்திரசேகருக்கு எடுத்துத் தருகிறார் பிள்ளை.

"தங்கம் நிறைய இருக்கணும் உங்ககிட்டங்கறாரு பட்டத்திரி."

சந்திரசேகர் அதை கேட்டு தயங்கி நிற்கிறார்.

"நிஜம் பற."

"உண்மையை சொல்வீங்களாம்."

"இருக்கு பிள்ளை."

"செரி போய்க்கோ."

பட்டத்திரி பதில் தெரிந்த சந்தோஷத்துடன் திருப்பி அனுப்ப மயானத்தில் கிட்டத்தட்ட சவம் போலவே நடந்து திரும்புகிறார் சந்திரசேகர்.

"கவலைப்படாதீங்க. இனி பிஸினஸ் எப்படி நடக்குதுன்னு பாருங்க. தெம்பாக பேசும் புத்தர பிள்ளையிடம் கலக்கமாய் நோக்குகிறது அவர் விழிகள்.

பிரமை பிடித்த மௌனக்கூடு. அதை நொறுக்குகிறா பிள்ளை.

"என்னடா திடீர்னு தங்கம் பத்தி பட்டத்திரி கேட்டுட்டானேன்னு பாக்கிறீங்களா?"

சந்திரசேகரிடம் ஆமோதிப்பு.

"அதுபத்தி இப்ப எதுக்கு கவலைப்பட்டுக்கிட்டு பின்னால சமாளிச்சுக்கலாம் முதல்ல நம்ப பிஸினஸ் அப்புறம் சதுர்வேதி. பிறகுதான் எல்லாம்."

"சதுர்வேதிய எப்படி சமாளிப்பான் பட்டத்திரி?"

"அதபற்றி நமக்கென்ன? நமக்கு காரியம் நடந்தா சரி."

"இதுக்கெல்லாம் எவ்வளவு காசு?"

"காரியத்தை முடிக்காம காசு வாங்கற பழக்கம் பட்டத்திரிக்கு கிடையாது."

"அப்ப நாளைக்கு ஐம்பது லட்ச ரூபா சரக்கு ஓடும்கறீயா பிள்ளை?"

"பாத்துட்டு சொல்றுங்க!"

## 4

ஓடி விட்டது.

அது மட்டுமா? நெடுநாட்களுக்குப் பிறகு மேலும் ஐம்பது லட்ச ரூபாய் சரக்குக்கு ஆர்டர் வேறு வந்து நின்றது. மார்க்கெட்டிங் மேனேஜரிடம் திக்கு முக்காடல்.



...சே ஆர் அண்ட் கோ, அப்புறம் மாருதி, ...வெல்லாம் நம்ம பிராடக்ட்டுக்கு ஆர்டர் புக் ...ங்க. ஆறுமாசம் கழிச்சு எகெய்ன் ஆர்டர்! ...ன் ஸ்டாக் முப்பது லட்சம் கூட இல்லை. ...து லட்சம் சரக்கை புரொஜக்ட் பண்ண நாலு நாள் ...ம் நான் நோ சொல்லாம கமிட் பண்ணிக்கிட்டேன்."

"...." சந்திரசேகர் சந்தோஷத்தோடு இன்டர்காமை ...கிட்டு மார்பு நிமிர்த்தினார்.

...ரில் பைப்பை வைத்து பாரிஸ்டர் ரஜினிகாந்த் மாதிரி ...ப்பாய் ஒரு உறிஞ்சு.

...னில் பட்டத்திரி பற்றிய பெருமிதமான நினைப்பு.

சதுர்வேதியினை இந்த பட்டத்திரி எப்படி சமாளித்...ப்பான்?

சதுர்வேதி சோகமாக இருந்தான்.

...றப்போட்ட ஜமக்காளம்போல் உப்பிப்போய் ...முகம். சுற்றிலும் அவனது சகாக்கள்.

..."ஷ்டப்பட்டு சந்திரசேகரை Over take செஞ்சோம். இப்ப ஒரே நாள்ல ஐம்பதுலட்சம் ஆர்டர் புக் அவனுக்கு. நீ என்னடான்னா மௌனமா நம்ம சரக்கை மூட்டை கட்டி வைன்னுட்டே-என்னாச்சு உனக்கு?"

-"சதுர்வேதியிடம் மௌனம்."

"கேக்கறேன்ல. சொல்லு. யானை தன் தலைல மண் அள்ளி போட்டுகிட்டமாதிரி இது என்ன பைத்தியக் காரத்தனம்?"

சதுர்வேதி மெல்ல மாமாவை பார்க்கிறார்.

"அங்கிள் இதுக்குமேல எதையும் பேசாதீங்க. ப்ளீஸ்."

“பேசவேண்டிய நேரத்துல பேசிடணும் சதுர். யூ ஆர் நாட் எ ரைட் பிசினஸ் மேன். நீ ஒரு கன்ஃப்யூஷிக் மேட்! பிசினஸை மேஜிக் மாதிரி (Run)ரன் பண்றே! பிசினஸ்னா அது ஒரு செபரேட் கல்ச்சர். அதுக்கு மெதட்ஸ், சிஸ்டம்ஸ், ரூல்ஸ், ரெகுலேஷன்ஸ் இருக்கு. இது எதையும் ஃபாலோ பண்ணாம நஷ்டத்தை பத்திக் கவலைப்படாம சந்திரசேகரை ஒய்க்கறதுக்காக பிராடக்டை சப்ளை செய்யச் சொன்னே. மற்ற கம்பெனி பர்ச்சேஸ் டிபார்ட்மெண்ட்டுக்கெல்லாம் விலை வெச்சே. வெரி க்ரூட் ஸ்ட்ராட்டஜீ ஆனாலும் பின்னால ஸ்டேண்ட் பண்ணிக்கற ஹோப் எனக்கு அதுல இருந்தது. ஆகையால நான் ஓ.கே. சொன்னேன். இப்ப திடீர்னு நம்ம சரக்குக்கு அதிக விலை! புரோக்கர் கமிஷன் கட், இன்னும் ஒரு மண்டலத்துக்கு புரொடக்ஷனே பண்ண வேண்டாம் பேட் டைம் நமக்குன்னு என்கொன்னமோ சொல்றே? என்னாச்சு உனக்கு. உனக்கு பின்னால யாரோ இருக்காங்க. அவங்க பேச்சை கேட்டு நீ ஸ்பாய்ல ஆகிகிட்டிருக்கே.”

“நோ அங்க்கிள். ப்ளீஸ் எனக்கு எகெய்ன்ஸ்டா எதாவது தோணினாலும் அதை பேசாதீங்க. அது உங்களுக்கு நல்லது கிடையாது.”

“பேசலேன்னா நான் நல்ல ஜி.எம், கிடையாது. அது தெரியுமா உனக்கு?”

“அங்க்கிள் ப்ளீஸ், ஷட் அப் யூவர் மவுத் ப்ளீஸ். ப்ளீஸ்.”

-சதுர்வேதி எழுந்து வந்து ஆதித்யா கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சின கெஞ்சலில் ஒருவித பயங்கரத்தை ஆதித்யாவால் உணர முடிந்தது.

“சம் திங் ராங்.”-என்று தனக்கு தானே சொல்லிக் கொண்டார்.” அப்படியே திரும்பி நடக்க ஆரம்பித்தார்.



அவர் அப்பால் போனதும் சதுர்வேதி எழுந்து பால்கனிப்பக்கம் போய் சுருட்டை எடுத்து இதழில் செருகிக் கொண்டான்.

குடலின் அடிப்பரப்பெல்லாம் நிரப்பும் அளவு கனல் பறக்க ஒரு உறிஞ்சு.

அப்பொழுது பார்த்து வான்வெளியில் மேற்குப் பள்ளத்தில் பாதி மூழ்கின சூரியனின் தலை தெரிந்தது.

“மைகுட்நெஸ்.” சுருட்டை தூக்கி எரிந்த சதுர்வேதி வேகவேகமாய் திரும்பி கை கால்களை கழுவிக்கொண்டு தனது பிரைவேட்ரூமுக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொள்கிறான்.

வாசல்வரை போய் கார் திறக்கும்போதுதான் ஆதித்யாவுக்குள் புதிதாய் ஒரு சிந்தனை.

அடடா சதுர்வேதியிடம் இது பற்றி கேட்காமல் விட்டுவிட்டேனே என்று ஒரு தேக்கம்.

என்ன நினைத்தாரோ திரும்பி நடக்க ஆரம்பித்தார்.

பிரம்மாண்டமான வீட்டின் ராஜஸ்தானத்து மார்பிள் கற்களில் அவரது நிழல் வெண்ணெயில் வழுக்கும் ஜெல்லி பழமாய் நழுவுகிறது.

வார்னீஷ் மின்னும் மாடிப் படிகளில் வேலைக்காரர்களின் பணிவான ஒதுங்குதலை எதிர்கொண்டு கார்பெட் கிரவுண்டில் கால் பதித்து சதுர்வேதி இடம் நோக்கிச் செல்கிறது.

எங்கே சதுர்வேதி?

“பால்கனில நின்னுகிட்டிருந்தார். இப்பதான பிரைவேட் ரூமுக்குள்ள போனாரு.” வேலைக்காரன் ஒருவனிடம் பதில்.

பிரைவேட் ரூமின் வேலைப்பாடு மிகுந்த அறையின் கதவைத் தட்டுகிறார் ஆதித்யா.

முதலில லேசாக.

பின்பு பலமாக...

எதற்கும் ரெஸ்பான்ஸ் இல்லை.

என்ன ஆயிற்று?

சாவித்துவாரம் வழியாக பார்க்க முனைந்தபோது ஆதித்யாவுக்கு கண்ணில் முள் தைத்த மாதிரி ஆகிவிட்டது உள்ளே சதுர்வேதி நிர்வாண கோலத்தில் நின்றபடி முறம் ஒன்றை கையில் வைத்துக்கொண்டு கீழே தரைமீது பொறிபோல் எதையோ எடுத்து வீச-அவை கீழே விழுந்த வேகத்தில் யாரோ பொறுக்கி எடுத்து தின்பதுபோல் மறைந்து கொண்டிருந்தது.

ஆதித்யாவுக்கு நெஞ்சைக் கரித்தது.

அங்கே நிற்கவே பயமாக இருந்தது.

அவர் கபாலத்தின்மேல் திடுக்கென்று ஒரு பல்லி எகிறி விழுந்து கார்பெட் தரையில் குதித்து ஓடி அவரை மேலும் உறையவிட்டது.

பார்த்துப் பார்த்து துடைத்து வைத்துக் கொள்ளும் வீட்டில் பல்லி எங்கிருந்து வந்தது?

பயம் பற்றி எரிய ஆரம்பித்தது.

சம்திங் ராங்!

மூளைச் செல்களில் அப்பட்டச் சிரிப்பு.

வேகமாக அங்கிருந்து நகர ஆரம்பித்தார். பரபரப்பாக காரைத் தொட்டு ஏறிக் கொண்டார்.

அனிச்சையாக ஓட ஆரம்பித்தது அந்த செவ்வக உலோகம்.



ஆதித்யாவின் காதோரமாக கூட வியர்வைப் பாம்பு. ஸ்டியரிங் முன்னால் ஒரு சிறுமியின் ரப்பர் பொம்மை தலை வளைத்துக் கூட்டிக் கொண்டு தொங்கக் கொண்டிருக்கும்.

கான்வென்ட் குழந்தை போல் பார்க்க படு லட்சணமாய்!

அந்த குழந்தை பொம்மையின் மோல்ட் உதடுகள் இப்பொழுது பிரிந்து அசைகின்றன! பிரமையா? நிஜமா?

“ஆதித்யா நீ பிரேக்கே பிடிக்கக் கூடாது. இது என் ஆர்டர்.”

“ஓ.கே. ஓ.கே.”-ஆதித்யாவிடம் கூட தன்னிச்சையான பதில்.

அதனால் காரிடம் காட்டு வேகம்.

சாலை மனிதர்களின் விழிகளில் எல்லாம் ஆச்சரிய வெறிப்பு. பலர் மயிரிழையில் எமனைப் பார்த்து, திடுக்கிட.

“எவண்டாவன் காட்டுப் பய...”-என்று ஒரு பாதசாரியின் கருத்து முற்றுப் பெறுமுன் எதிரே வந்து கொண்டிருந்த ஒரு ட்ரக் லாரியின் நடுமுகத்தில் அதிகபட்ச வேகத்துடன் மோதி ஒரு உச்சபட்ச சப்தத்தை உருவாக்கியபடி பீஸ்பீஸாகச் சிதறியது அந்த வாகனம்.

ஆதித்யா கூட ஆயிரத்தெட்டு துண்டுகளாய்!

## 5

சதுர்வேதியின் களை இழந்த முகத்தை பார்க்கவே சகிக்கவில்லை. ஆதித்யாவை வழித்து எடுத்து எரித்து முடித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பியிருந்தார்.

பிரைவேட் ரூமின் வேலைப்பாடு மிகுந்த அறையின் கதவைத் தட்டுகிறார் ஆதித்யா.

முதலில லேசாக.

பின்பு பலமாக...

எதற்கும் ரெஸ்பான்ஸ் இல்லை.

என்ன ஆயிற்று?

சாவித்துவாரம் வழியாக பார்க்க முனைந்தபோது ஆதித்யாவுக்கு கண்ணில் முள் தைத்த மாதிரி ஆகிவிட்டது உள்ளே சதுர்வேதி நிர்வாண கோலத்தில் நின்றபடி முறம் ஒன்றை கையில் வைத்துக்கொண்டு கீழே தரைமீது பொறிபோல் எதையோ எடுத்து வீச-அவை கீழே விழுந்த வேகத்தில் யாரோ பொறுக்கி எடுத்து தின்பதுபோல் மறைந்து கொண்டிருந்தது.

ஆதித்யாவுக்கு நெஞ்சைக் கரித்தது.

அங்கே நிற்கவே பயமாக இருந்தது.

அவர் கபாலத்தின்மேல் திடுக்கென்று ஒரு பல்லி எகிறி விழுந்து கார்பெட் தரையில் குதித்து ஓடி அவரை மேலும் உறையவிட்டது.

பார்த்துப் பார்த்து துடைத்து வைத்துக் கொள்ளும் வீட்டில் பல்லி எங்கிருந்து வந்தது?

பயம் பற்றி எரிய ஆரம்பித்தது.

சம்திங் ராங்!

மூளைச் செல்களில் அப்பட்டச் சிரிப்பு.

வேகமாக அங்கிருந்து நகர ஆரம்பித்தார். பரபரப்பாக காரைத் தொட்டு ஏறிக் கொண்டார்.

அனிச்சையாக ஓட ஆரம்பித்தது அந்த செவ்வக உலோகம்.



ஆதித்யாவின் காதோரமாக கூட வியர்வைப் பாம்பு.

ஸ்டியரிங் முன்னால் ஒரு சிறுமியின் ரப்பர் பொம்மை தலை வளைத்துக் கூட்டிக் கொண்டு தொங்கக் கொண்டிருக்கும்.

கான்வென்ட் குழந்தை போல் பார்க்க படு ட்சணமாய்!

அந்த குழந்தை பொம்மையின் மோல்ட் உதடுகள் இப்பொழுது பிரிந்து அசைகின்றன! பிரமையா? நிஜமா?

"ஆதித்யா நீ பிரேக்கே பிடிக்கக் கூடாது. இது என் ஆர்டர்."

"ஓ.கே. ஓ.கே.''-ஆதித்யாவிடம் கூட தன்னிச்சையான பதில்.

அதனால் காரிடம் காட்டு வேகம்.

சாலை மனிதர்களின் விழிகளில் எல்லாம் ஆச்சரிய வெறிப்பு. பலர் மயிரிழையில் எமனைப் பார்த்து, திடுக்கிட.

"எவண்டாவன் காட்டுப் பய...''-என்று ஒரு பாதசாரியின் கருத்து முற்றுப் பெறுமுன் எதிரே வந்து கொண்டிருந்த ஒரு ட்ரக் லாரியின் நடுமுகத்தில் அதிகபட்ச வேகத்துடன் மோதி ஒரு உச்சபட்ச சப்தத்தை உருவாக்கியபடி பீஸ்பீஸாகச் சிதறியது அந்த வாகனம்.

ஆதித்யா கூட ஆயிரத்தெட்டு துண்டுகளாய்!

## 5

சதுர்வேதியின் களை இழந்த முகத்தை பார்க்கவே சகிக்கவில்லை. ஆதித்யாவை வழித்து எடுத்து எரித்து முடித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பியிருந்தார்.

துக்கம் கேட்க கூட்டமான கூட்டம்.

அதிசயமாய் அவர்களில் சந்திரசேகரும்!

கூடவே பத்மநாபன் பிள்ளை.

"எப்படி இருந்தான்? எப்படி ஆகிட்டான் பாத்தீங்களா எல்லாம் பட்டத்திரியோட சாமர்த்யம்."

கூட்டத்தில் காதைக் கடித்துக் கொண்டிருந்தார் பத்மநாப பிள்ளை.

சதுர்வேதி பி.ஏ. வை அழைத்து விசாரித்தார்.

"என்னய்யா சந்திரசேகரெல்லாம் வந்திருக்கான்."

"ஜஸ்ட் கர்ட்டசி சார். அதுல அவர் ஒரு ஜென்டில்மேன்."

"அவனைப்பத்தி என் கிட்டையே சர்ட்டிபிகேட்டா."

"நத்திங் சார். உள்ளதைச் சொன்னேன்."

"நான் யாரையும் பார்க்க விரும்பலை. நீயே பார்த்து அனுப்பிடு."

"அது அவ்வளவு நல்லா இருக்காது சார். பிசினஸ்ல போட்டி இருக்கலாம். அதுக்காக கர்ட்டசீஸ்ல..."

"மைண்ட் யுவர் பிசினஸ். அட்வைஸ் பண்றத முதல்ல நிறுத்து" பேசிவிட்டு காத்திருக்காமல் எழுந்திருந்து தன் பர்சனல் அறைக்குள் நுழைந்து கதவை சாத்திக் கொண்டார்.

படுக்கும் கட்டிலுக்கு கீழே ஒரு துணியால் சுற்றி மூடப்பட்ட நிலையில் முறம் தெரிந்தது. அருகிலேயே ஒரு டின்னில் பொரி!

பீரோவை திறந்தபோது கேஷ்பாக்ஸ் அருகே அந்த குட்டிச்சாத்தான் பொம்மை! எல்லாம் பட்டத்திரி கொடுத்த சரக்கு.



பட்டத்திரி பூஜையில் வைத்துத் தந்த பொம்மை.

"சாத்தானை கொண்டு போ. வீட்டில வெச்சு பூஜை செய் தினமும் சாயரட்சையில் பொரி போடு. சாத்தான் நீ சொல்றதையெல்லாம் கேட்பான். உனக்கு ஜெயமே உண்டாகும். ஆனா ஒரு நாள் ஒரு பொழுது கூட பொரி போட தவறக்கூடாது. தவறினா சாத்தான் கோபத்துக்கு நீ பயங்கரமா ஆளாவே."

பட்டத்திரி இப்படியெல்லாம் சொல்லித் தந்த பொம்மை.

வெளியே எடுத்துப் பார்த்துவிட்டு பொம்மையை இருந்த இடத்தில் வைக்கிறார் சதுர்வேதி!

அருகாமை கட்டில் மல்லாந்து கொள்ளச் சொல்கிறது. நினைவுகள் கொடி போல் வளைத்துக் கட்டப் பார்க்கின்றன.

உலகிலேயே பெரிய பணக்காரன் ஆகவேண்டும் என்று ஆசைப்பட்டதில் இருந்து அது தொடங்குகிறது.

'முதலில் லோக்கல் மதுரையில் முதல் இடத்தை பிடி. பிறகு பார்க்கலாம் உலகளவு' என்று தனக்கு தானே சொல்லிக் கொண்டதில் மையம் கொள்கிறது மனது.

இது என்ன நல்ல உலகமா?

நேர்மை நாணயம் நியாயம் எல்லாம் பார்த்து முன்னேற?

கலி.

பொல்லாத கலியுகம்.

மனைவிகள் கணவனையும் மகன்கள் தகப்பன்மார் களையுமே காட்டிக் கொடுத்து துரோகம் செய்யும் காலமாயிற்றே?

எல்லாமே விலைக்கு வந்து விட்ட காலம். கற்பு முதல் கிட்னி வரை...

இதில் வேகமாய் முன்னுக்கு வர நிறைய பாவம் செய்ய வேண்டும். (தொழில் வல்லுனர்கள் பாஷையில் ஸ்ட்ராட்டஜீஸ்) செய்தால்தான் காசு என்ற முடிவுக்கு வந்தபோது தான் பட்டத்திரி பற்றி தெரிய வந்தது. தெரிவித்தவர் பெயர் தேவராஜ்!

பட்டத்திரிக்கும் குபேரனுக்கும் ஹாட்லைன் கனெக்ஷன் இருப்பதாக அந்த நபர் சொன்னபோது குபேரன் யார்? குபேரபட்டினம் எங்கிருக்கிறது போன்ற வரலாறு எல்லாம் தெரிய வந்தது.

'அற்புதமான புராண புருடாக்கள்' என்று சதுர்வேதி சிரித்தபோது தேவராஜ் ஒரு பந்தயம் கட்டினார்.

'பட்டத்திரி தரும் ஒரு யந்திரத்தை பட்டத்திரி சொல்லும் விதமாய் பூஜிக்க வேண்டும். அப்படி செய்தால் எண்ணி பதினொரு நாளில் உங்கள் சொத்து மதிப்பு இருமடங்காகும். ஆனால் நம்புங்கள். ஆகாவிட்டால் விடுங்கள்.'

இதுதான் அவர் சொன்னது.

யந்திரமும் வந்து சேர்ந்தது. விசித்திரமான அபூர்வ மலர்களை கஷ்டப்பட்டு கொண்டுவந்து நிதமும் பூஜை... என்ன அதிசயம்?

நொண்டிக் கொண்டிருந்த பிசினஸில் ஒரு பிரமாத திருப்பம் சொன்னது போலவே பதினோராவது நாளில் சொத்தின் மதிப்பு இரு மடங்கைத் தாண்டிவிட்டது.

இப்படித்தான் பட்டத்திரி நம்பிக்கை வலுப்பட்டது. அதன்பின் மூச்சில் பேச்சில் வாசலில் எங்கும் பட்டத்திரி தான்! எதிலும் பட்டத்திரிதான்.



பட்டத்திரி சொல்கிற மாதிரி தான் படுத்தார். எழுந்தார் சாப்பிட்டார், போனார், வந்தார்.

அந்த பணக்கார கனவு கை கூடும் போல் தெரிந்தது. பிசினஸ் உலகம் சதுர்வேதி பெயரை மந்திரம் மாதிரி உச்சரிக்க ஆரம்பிச்சது.

சந்திரசேகரிலிருந்து சகலமும் சரிய ஆரம்பிக்க சதுர்வேதியின் லட்சிய விமானம் டேக் ஆஃப் ஆகி விண்ணில் எகிறியது.

இன்று அதில் ஒரு தேக்கம்.

'கொஞ்ச காலத்துக்கு எந்த வர்த்தக முயற்சியும் செய்யாதே-தோல்வி வரும்'-என்று பட்டத்திரியிடம் இருந்து புதிய தகவல்.

'இதை நம்பாதவர்களும், விமர்சிப்பவர்களும் மரண மடைவார்கள்.'-இது அந்த தகவலின் தொடர்ச்சி தகவல் ஆதித்யா மூலம் உண்மையாகிவிட்டது.

அதனால் பயமும் குழப்பமும் வந்து கூடு கட்டிக் கொண்டுவிட்டது. அடுத்து என்ன செய்வது? எந்தப் பக்கம் செல்வது என்று ஒரே குழப்பமாக இருக்கிறது.

பட்டத்திரி கை தூக்கி விடுவாய் என்று நம்பி வந்தால் முடக்கி போட்டு விட்டாயே நியாயமா? நீதியா?

சதுர்வேதி மனது அழுகிறது.

சரியான ஊமை அழுகை.

அழுவதால் பிரச்சினை தீருமோ?

பேசாமல் போய் பட்டத்திரியையே பார்த்து விடுவோம்-அதுதான் சரி.

சதுர்வேதி கறுப்பு ஆடைகளை தேடி எடுத்து அணிந்து கொண்டு தனி ஆளாய் கிளம்பி விட்டார்.

கிளம்பும்போது ஞாபகமாய் ஒரு கோழியை அறுத்து வடக்குப் பக்கம் வீசிவிட்டு ரத்தப் பொட்டுடன் கிளம்பியதை சில வேலைக்காரர்கள் பார்த்து அகல கண் விரிக்கின்றனர்.

அடிவயிறு குழிவிழ பயப்படுகின்றனர்.

## 6

மயானத்துக்கு எதிரில் ஒரு மண் குடிசை. வெளியே ஒரு எட்டி மரம். மரக்கிளை மேல் நல்ல ராஜ உடும்பு ஒன்று படுத்தபடி மயானத்துக்கு வந்து செல்பவர்களை நோட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. கருமஞ்சள் நிறம்,

குடிசையை விட்டு வெளியே வந்த பட்டத்திரி எட்டிக்காய் ஒன்றை பறித்துக் கொண்ட கையோடு உடும்பை வருடிவிட அது அவனை மசங்க மசங்க ஒரு பார்வை பார்த்துவிட்டு தன் இரட்டை நாக்கை சிருட் என்று நீட்டி வாஞ்சை காட்டுகிறது.

பட்டத்திரி எட்டிக்காயை எடுத்துக் கொண்டு உள்ளே போய் அதை நசுக்கி துளி தண்ணீர் விட்டு மாவு போல் அரைத்து எடுத்து ஒரு நாவில் தடவிக் கொண்டு நெடுநேரம் வாயை மூடியபடி அமர்ந்திருக்க ஆரம்பிக்கிறான்.

இந்த வேளை பார்த்து குடிசை வாசலை எட்டுகிறது சதுர்வேதியின் கார்.

உடும்பிடம் ஆச்சரியப் பார்வை.

மண் குடிசை வாசலில் நிற்கும் சதுர்வேதி உள்ளே செல்லத் தயங்கியபடி நிற்கும் போது பட்டத்திரியை எழுந்து வெளியே வந்தான்.

பார்வையே என்ன என்று கேட்கிறது.



சதுர்வேதியிடம் மிகக் கலக்கமான பார்வை, முகத்தில் அப்பிக் கொண்ட மாதிரி சோகம்.

''பட்டத்திரி என் மாமா ஆதித்யா அநியாயமா செத்துட்டார். வேகமா போன பிசினசும் நின்னு முழிக்க ஆரம்பிச்சுடிச்சு. இந்த சூழ்நிலையை என்னால தாங்கிக்க முடியலை.''

''தாங்கித்தான் ஆகணும்.''-பட்டத்திரியின் பதில் சதுர்வேதியை சங்கடப்படுத்துகிறது.

''நான் முன்னுக்கு வரணும். அதுலயும் வேகமா வரணும்னுதானே உன் கிட்டே வந்தேன். நீயும் நல்லபடியா தானே எல்லாம் செஞ்சே-இப்ப மட்டும் ஏன் இப்படி...?''

''உனக்கு நேரம் சரியில்லை-அதனாலதான்.''

''எவ்வளவு மோசமான நேரமாருந்தாலும் உரிய பரிகாரம் செய்தா தப்பிக்கலாம்னு சொல்வியே அந்த பரிகாரத்தை செஞ்சு என் முன்னேற்றத்தை நான் தொடரக்கூடாதா?''

''பரிகாரம் உண்டு-ஆனா அத உன்னால செய்ய முடியாது.''

''என்னன்னு சொல்லு. அப்புறம் முடியும் முடியாதுன்னு முடிவெடுப்போம்?''

''வேண்டாம் சதுர்வேதி. உனக்கு நேரம் சரியில்லை. அஷ்டமத்துல சனி பெயர்ந்து வந்து உட்கார்ந்திருக்கான். எதை செய்தாலும் நீ அகப்பட்டுக்கவே. ஒரு மண்டலம் கழிச்சு வா. உனக்காக நான் இந்த ஒரு மண்டலமும் விசேஷ பூஜை செய்ய இருக்கேன். அதுக்கு பிறகு மெல்ல உன் நிலை சரியாயிடும்.''

''பிஸினஸ்ல ஒரு நாள் ஒரு மணி-இல்லையில்ல. ஒரு வினாடி சுணங்கினாலும் கூட எதிரி வேகமா முன்னேறிடுவான். அப்படிப்பட்ட போட்டி உலகம் இது. நீ என்னை ஒரு மண்டலம் காத்திருக்கச் சொல்றது என்னை எழுந்திருக்க முடியாதபடி செஞ்சுடும்.''

''பயப்படாதே உன்னை எழுப்பறேன். இப்ப போ.''

''போறேன். ஏதோ பரிகாரம்னு சொன்னியே.''

''விடமாட்டியா? உன்னால அதை செய்ய முடியாது சதுர்வேதி.''

''என்னன்னாவது தெரிஞ்சுக்க கூடாதா?''

''தங்கப் பாத்திரம் செஞ்சு அதுல உன் ரத்தத்தை நிரப்பி இதே சுடுகாட்டுல ஈசான பூஜை செய்யணும் நாலு திக்குக்கும் நாலு பாத்திரம். நாலு பாத்திரம் நிறைய உன்னோட ரத்தம், பூத பிரேத பைசாசங்களுக்கு அதை காணிக்கை தரணும். அப்படி செஞ்சா நீ அவங்க அன்பை பெறலாம். அதன் பிறகு உனக்கு எந்த கெடுதல் யார் செய்ய வந்தாலும் இவங்க பார்த்துக்குவாங்க. இதை நீ நம்பணும். பிறகு தங்கபாத்திரம் செய்யணும். அது நிறைய உன் ரத்தம் வேற... யோசிச்சு பாரு-உன்னால முடியாது. அதனால சொல்றேன் போ. போயிடு.''

பட்டத்திரியின் பேச்சைக் கேட்டு சதுர்வேதி முதலில் திடுக்கிட்டாலும் பின்னர், அது ஏதோ தன்னால் முடிந்த மாதிரியான ஒரு விஷயம் என்கிற பாவனைக்குத்தான் வந்தான்.

''பரவால்ல பட்டத்திரி நான் நாளைக்கே இந்த பரிகாரத்துக்கு தயார்.''

''யோசிச்சுப் பார்! தங்க பாத்திரம் செய்யணும். நாலு நாலு விதமான பாத்திரம். கால்படி ரத்தம்



கொள்ளும்படியான பாத்திரம். சொக்கத்தங்கப் பாத்திரம். இல்லெங்கில் பூத பிரேத பைசாசங்கள் கோபம் கொள்ளும். யார் கோபத்தையும் தாங்கலாம். இவங்க கோபத்தை தாங்க முடியாது. வேண்டாம் விளையாட்டு.''

''சொக்கத்தங்க பாத்திரத்தையே செஞ்சு எடுத்துகிட்டு வரேன். கவலைப்படாதே.-எனக்கு பிசினஸ் பெரிசு. அதை நான் இப்ப லூஸ்ல விட்டா பின்னால ஒண்ணும் பண்ண முடியாது. அப்புறம் அந்த சந்திரசேகர் மாதிரி ஆளெல்லாம் பெரிய ஆளாயிடுவான்.''

''நான் எப்ப வரணும்? எப்படி வரணும்?''

-சதுர்வேதியின் பதிலைக் கேட்டு பட்டத்திரி முகம் விபரீதமாய் மாறுகிறது. சூழ்ந்து யோசிக்கிறது.

பின்னர் கருங்காவி உதடு பிரிய ''அர்த்த ஜாமம் வா'' என்கிறது.

# 7

**அ**லுவலகம் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அப்படி இப்படி திரும்ப சுவாசமில்லாத பிரஷர்.

சந்திரசேகரின் டேபிள் மேல் செக் புக்கும், ஃபைல்களும் சுவரையே மிரட்டுமளவு உயர்ந்து கொண்டிருக்க பி.ஏ. வந்து காதைக் கடிக்கிறார்.

''சார் பாம்பே பஜன்லால் வந்துருக்கார் பிசினஸ் பேச வந்திருக்கார். ஷுட் யூ அலாட் டுவென்டி மினிட்ஸ்.''

''யெஸ்.''

-அடுத்த நாற்பதாவது நொடியில் பரங்கிப் பழமாய் ஒரு குல்லா மனிதர். அச்சடித்த வடநாட்டு ஜாடை. கூடவே ஒரு கோட் சூட் உதவியாளன்.

‘‘வெல்கம் சேட்ஜி வெல்கம்’’ சந்திரசேகர் சீட்டை விட்டு எழுந்து நின்று, வரவேற்க பஜன்லால் சேட் குஷியாய் அதை அங்கீகரிக்க பரஸ்பரத்தில் துவங்கும் வியாபாரப் பேச்சு ஒரு உச்ச நிலைக்கு போக ஆரம்பித்தது.

இந்த பஜன்லால் இதுநாள் வரை சந்திரசேகரை ஒரு சுண்டைக் காயாய் நினைத்த மாதிரி. இன்றைக்கு பலாப் பழமாய் நினைத்து வந்திருக்கிறார். அது அவர் பேச்சிலும் தெரியாமல் இல்லை.

‘‘சந்திரசேகர் உனக்கு ஒரு பிரைட் ஃபியூச்சர் இருக்கு உன் புராடக்டுக்கு ஜப்பான் ஆர்டர் நான் வாங்கித் தரேன். யூஷிவல் கமிஷன் தந்தா போதும். அப்படியே என் யார்ன் பிசினஸ்க்கு நீ இங்க ஒரு மார்க்கெட் கிரியேட் பண்ணு தர்ட்டி பர்சன்ட் உனக்கு லாபம் தரேன். என்ன சொல்றே.’’

‘‘எல்லாம் உங்க ஆசீர்வாதம் சேட்.’’

‘‘ஷீக்கரியா. அப்ப நான் வரேன். கீப் இன் டச் எவ்ரிடே. ஓ.கே.’’

‘‘ஓ.கே. சேட்!’’

சேட் கை குலுக்கி விட்டு விடை பெற அந்த ரூமுக்குள் புன்னகையுடன் நுழைகிறார் பத்மநாப பிள்ளை.

‘‘உங்களை இப்படி மலர்ந்த பூவா பார்த்து எவ்வளவு நாளாச்சு!’’-பிள்ளையிடம் சிலாகிப்பு.

‘‘வாய்யா வா. வராதவன் வந்துட்டு போறான். பார்த்தில்ல.’’

‘‘பார்த்தேன் பார்த்தேன். பஜன்லால் வந்தா அந்த நாசிக் பிரிண்டிங் மெஷினே வந்துட்டு போறதா அர்த்தம். எல்லாம் பிசினஸ் பஜார் மேகசைன் பண்ற வேலை.’’

‘‘என்னய்யா சொல்றே?’’



‘‘நீங்க மேகசைன் பாக்கலையா அதோட தலையங்கத்துல உங்களுக்கு பிரமாதமான எதிர்காலம் இருக்கறதா எடிட்டர் ராம்விலாஸ் நந்தா எழுதியிருக்கார்.’’

‘‘நிஜமாவா. எங்கே மேகசைன்?’’

பிள்ளை புத்தகத்தை தூக்கி சந்திரசேகர் முன் போடுகிறார். ஆவலாக அள்ளி விழுங்குகிறது சந்திரசேகர் விழிகள். முகத்தில் முலாம் போட்ட மாதிரி பளபளப்பு. தங்க பிரேம் கண்ணாடியை நெகிழ்ந்துவிட்டபடி பிள்ளை பக்கமாய் ஊன்றுகிறார் சந்திரசேகர்.

‘‘உனக்கு நான் ரொம்ப கடமைப்பட்டிருக்கேன் பிள்ளை.’’

‘‘பட்டத்திரிக்குன்னு சொல்லுங்க.’’

‘‘உங்க இரண்டு பேருக்கும்தான். நடக்கறதெல்லாம் கனவா இல்லை நனவான்னு எனக்கு சந்தேகமா இருக்கு. அந்த சதுர்வேதி என்னை விழுங்கிடுவான். நான் தொலைஞ்சிட்டேன்னு நினைச்சேன். நீ காப்பாத்திகிட்டே.’’

‘‘இதெல்லாம் என்னங்க. வேர்ல்ட் லெவல்ல நாம பேசப்பட போறோம். நியூயார்க்கல நம்ம பிராஞ்ச் ஓபன் ஆகப் போகுது.’’

‘‘நிஜமாவா சொல்றே? ஈஸ் இட் பாசிபிள்?’’

‘‘பட்டத்திரி கைவசம் இருக்கும்போது நமக்கு என்னங்க கவலை.’’

‘‘பட்டத்திரிக்கு பதிலுக்கு எதாவது பண்ணணும் பிள்ளை. என்ன பண்ணலாம்?’’

‘‘பட்டத்திரி எதையும் கேக்கமாட்டார். அவருக்கு எதுக்கு பணம்? அவர் அன்பு இருந்தா போதும் நமக்கு.’’

''நான் செஞ்ச புண்ணியம் பட்டத்திரிய பார்த்தேன். இல்லேன்னா நான், என் பிசினஸ், இந்த பேர் புகழ் எல்லாம் மை காட்!''

சிலிர்த்துப் போகிறார்.

''ரொம்ப உணர்ச்சி வசப்படறீங்க. அன்னிக்கு என்னமோ விஞ்ஞானம் எம்.ஏ. எம்.பி.ஏ'ன்னு என்னென்னமோ சொன்னீங்களே. இப்ப சொல்லுங்களேன். பார்ப்போம்.''

''ரியலி இப்ப கூட எனக்கு இதெல்லாம் ஒண்டரா தான் இருக்கு. படிப்பால முடியாதது எப்படி பட்டத்திரியால முடியுது. இந்த தேவதை பேய் பிசாசு எல்லாம் ஹல் சன் இட் பாசிபிள்?''

''போச்சுடா. நிதர்சனமா உணர்ந்துமா ஹவ் இட் பாசிபிள்?''

''நோ... நோ... அதுக்கு சொல்லலை. எனக்கே பட்டத்திரி இவ்வளவு உதவி செய்ய முடியுதே-நம்ப தேசத்துக்கு எவ்வளவு செய்யலாம்?''

''என்ன சொல்றீங்க?''

''டெல்லில பைனான்ஸ் மினிஸ்டரோட செகரட்ரி எனக்கு நல்ல பழக்கம். அவர்கிட்டே சொல்லி பைனான்ஸ் மினிஸ்டருக்கு பட்டத்திரிய பழக்கிவிட்டு அவரோட திறமையால பைனான்ஸ் மினிஸ்டரோட ஃபாரின் டூர்ல நிறைய சாதிக்கறதுக்கு வழி பண்ணலாம்னு இருக்கேன். இந்தியான்னா உலகமே சலாம் போடணும்.''

''நீங்க ரொம்ப அவசரப்படறீங்க. பட்டத்திரி உங்களுக்கு உதவி செய்றதே பெரிசு. இதுல நீங்க எல்லார்க்கும் இழுத்து விடாதீங்க...''



''போல் பிள்ளை... என்னய்யா பேசறே நீ. நம்மளை தேசம் பெரிசய்யா. பாகிஸ்தான்காரன் வேற எல்லையில வாலாட்டிகிட்டே இருக்கான். அவர்களுக்கு ஏவல் வெச்சு அந்த தேசத்தையே முடிக்கணும், சிலோன் பிரச்னை வேற இருக்கு. பட்டத்திரி உலக அளவு பண்ணணும்னு நான் நினைக்கிறேன்.''

''வாய மூடுங்க... எப்ப என்ன பண்ணணும்னு பட்டத்திரிக்கு தெரியும். உங்க வேலையை மட்டும் பாருங்க. ஒரு முக்கியமான விஷயம்.''

''என்னய்யா?''

''பட்டத்திரி ராத்திரி உங்களை காட்டுக்கு வரச் சொன்னார்.''

''அந்த சுடுகாட்டுக்கா? எதுக்கய்யா?''

''அன்னிக்கு எதுக்கு போனோமோ அதுக்குத்தான். ஏன் எதுக்குன்னு கேக்கறதை முதல்ல விடுங்க. கிளம்பத் தயாரா இருங்க, நானும் டயத்துக்கு வந்து சேர்ந்துடறேன்.''

பிள்ளை சொல்லிவிட்டு கிளம்பினார்.

சந்திரசேகர் சற்று சுணங்கிவிட்டு பிறகு பரபரப்பாக ஃபைல் பார்க்க ஆரம்பித்தார். அந்த உற்சாக மனநிலை தொடர்ந்தது. உதட்டில் கூட பாட்டு, பழைய பாட்டு தான்.

'உலகம் பிறந்தது எனக்காக.

ஓடும் நதிகளும் எனக்காக...'

## 8

ராத்திரி ராஜ்யத்தில் சந்திரனை மேகப்பொதி மறைத்துக் கொண்டிருந்தது.

தெற்கிலிருந்து வடக்காக சிகப்பு விளக்கு அணைந்து எரிவதில் ஒரே ஏரோப்பிளேனின் பயணத்தை உணர முடிந்தது.

மந்தமாய் ஈரத்தன்மையில்லாத காற்று வீச்சு! வானில் ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்து விட்டதால் உலகில் பருவநிலைகளே மாறி விட்டதைச் சொல்வதுபோல இருந்தது அந்தக்காற்று.

வழக்கமாய் சில்வண்டும், சுவர்க் கோழியும் கச்சேரிச் செய்யும் ராத்திரியில் இப்பொழுது கொசுக் கூட்டத்தின் ஹார்மோனிய முனகல் சப்தம் வேறு...

வழக்கம்போல காக்காயன் சுடுகாடு.

ஒரு பணக்கார உடம்பு சந்தனக்கட்டை வைத்து எரிக்கப்பட்டு கொண்டிருக்க வெட்டியான் சாராய பாட்டிலை திறந்து கொண்டிருந்தான்.

ஒரு ஓரமாய் நரி ஒன்று ஊளை போட்டு தன் சகாக்களை சாப்பாட்டுக்கு அழைத்துக் கொண்டிருக்க சுடுகாட்டு வாயிலில் அந்த பிராணா மரத்தடியில் வந்து தங்குகிறது சதுர்வேதியின் கார்.

கருப்பு உடுப்பில் கை வசம் சொன்னபடி தங்கப் பாத்திரத்தோடு இறங்கினான் சதுர்வேதி. பட்டத்திரியின் ஆலோசனைப்படி அதை ஜாதிக்காய் மரப்பெட்டியில் வைத்து எடுத்து வந்திருக்கிறான்.

கூடவே பளபளப்பான கத்தி.

மயானப்பாதையில் அவன் பெட்டியும் கத்தியுமாக நடப்பதைப் பார்க்க பயமாக இருக்கிறது.

“வாங்க சார் வாங்க...” ஒரு மரத்தின் பின்னால் இருந்து வெளிப்படுகிறான் ஒருவன்... ஓ... அது தேவராஜ்!



பட்டத்திரி தயாரா இருப்பாரா தேவராஜ்-சதுர்வேதி கேள்வி கேட்ட நபர் பட்டத்திரிக்கும் சதுர்வேதிக்கும் பழக்கத்தை உருவாக்கிய அதே தேவராஜ்தான்.

சந்திர சேகருக்கு எப்படி பத்மநாபபிள்ளையோ அப்படி சதுர்வேதிக்கு தேவராஜ்.

‘ரெடியா இருக்கார் சார். பூஜையை ஆரம்பிக்க வேண்டியதுதான்...’’-இருவருமாய் பட்டத்திரியை தேடி மயான நடுப்பகுதிக்கு நடக்கிறார்கள். வழியிலேயே வெட்டியான் குடிபோதையோடு சரிந்து நடந்ததையும் பார்க்கிறார்கள்.

அந்த பணக்கார சடலம் இப்பொழுது எழுந்து அமர்ந்தபடி எரிந்து கொண்டிருந்தது.

“அந்த உடம்பு பரமேஸ்வரனோடது சார்...”

தேவராஜ் கூறவும் சதுர்வேதி பயமின்றி பார்க்கிறான்.

“உனக்கு இன்னம் ஒரு மாசம் தான் ஆயுள்னு இவன் டேட்டை சொன்னவரே பட்டத்திரிதான். சொன்ன மாதிரியே போய் சேர்ந்துட்டான்.”

தேவராஜின் இந்த விளக்கம் மட்டும் சதுர்வேதியை சற்று இடிக்கிறது.

“வா சதுர்வேதி...”-பட்டத்திரியிடம்கூட அழைப்பு.

“சொர்ண பாத்திரம் கொண்டு வந்தியோ?”

“வந்திருக்கேன் பட்டத்திரி...”-பதிலோடு பாத்திரப் பெட்டி பட்டத்திரியிடம் எதிரே நீள்கிறது. வாங்கிப் பார்க்கப் பட்டத்திரி கை அதை எடை போடுகிறது.

“எத்தர பவுன்?”

“ஒவ்வொவொன்னும் நூறு கிராம்... கிட்டத்தட்ட 12 1/2 பவுன். மொத்ததுல ஐம்பது பவுன்.”

"ஆஹா... வளர சந்தோஷம். வா பூஜிக்கலாம்."

சதுர்வேதியை அழைத்துக் கொண்டு நடக்கிறான்.

எங்கே?

ஊமத்தைச் செடி ஊட்டமாய் வளர்ந்திருக்கும் ஒரு இடத்தில் இடுப்புயரத்திற்கு ஒரு மண் மேடை! அதில் ஏதோ ஒரு வகை கோலம்.

"போய் அது மேல ஏறி நிக்கோ..." நிற்கிறான் சதுர்வேதி.

"வலதுபுறம் நோக்கி நான் சொல்லும் மந்திரத்தைச் சொல்... சொல்லிக்கிட்டே கையையோ, காலையோ கீறி ரத்தத்தை இந்த தங்கப் பாத்திரங்கள்ள பிடி..."

-சதுர்வேதி தயாராக... தேவராஜ் நடப்பதை புதிர் போல் அணுகிப் பார்க்க மணி பன்னிரெண்டைக் கடந்து கொண்டிருந்த காரிருள் ஜாமத்தில் மயான வாயிலை மற்றொரு கார் எட்டியிருந்தது.

உள்ளே சந்திரசேகரும்-பிள்ளையும்!

சந்திரசேகர் இறங்கும் போதே சதுர்வேதியின் காரை கவனித்து விடுகிறார்.

"யோவ் பிள்ளை என்னய்யா இந்த சதுர்வேதி திரும்ப வந்திருக்கிறான் போல இருக்கே..."

"அட ஆமாம்... வாங்க உள்ள போய் பார்ப்போம்."

"நான் வரலை. நீ போய் பார்த்துட்டு வா. அவன் இருக்கும் போது எப்படிய்யா பட்டத்திரியை பாக்கறது,"

"சரி..." பிள்ளை பேசிவிட்டு மயானத்துக்குள் நுழைந்த தோரணையில் புழுதி பறந்தது.

போன வேகத்தில் ஓடிவந்தார் பிள்ளை.



"சார் முதல்ல காரை எடுங்க. சதுர்வேதி வந்து ட்டிருக்கான்."

"வந்தா வரட்டும்... என்னய்யா பண்ணிடுவான்-அதான் பட்டத்திரி இருக்காப்பலல்ல..."

"ஐயோ புரியாம பேசறீங்களே... நம்ப நோக்கம் பூராவும் கெட்டுடும் வாங்க முதல்ல-அப்புறமா மத்ததெல்லாம்."

வேறு வழியில்லாமல் அந்த கார் திரும்பி பின்னால் ஓடத்தொடங்கியது.

படுத்தறய்யா நீ..." சந்திரசேகரிடம் சலிப்பு.

"நான் படுத்தலை. படுத்தறதெல்லாம் சதுர்வேதி தான்."

"அவன் தான் அழிய ஆரம்பிச்சாச்சே-இனி அவனைப் பத்தி என்ன பேச்சு வேண்டியிருக்கு..."

"சரி சரி காரை அப்படி ஓரம் கட்டுங்க அந்த வைக்கப்போர் பக்கமா... விஷயம் தெரிஞ்சுடும்..."

அதன்படியே விஷயம் தெரிய ஆரம்பித்த போது சந்திரசேகருக்கு மென்னியை நண்டுக் கால்கள் கவ்வுவது போல் ஒரு பிரமை.

பிள்ளை கூட பிரமை பிடித்தார் போல் தான் இருந்தார்.

"பட்டத்திரி... நீ என்ன சொல்றே-அந்த சதுர்வேதி திரும்பவும் பிசினஸ் டாப்புக்கு போவானா?"

"ஆமாம்..."

"போகக்கூடாது... அதுக்குத் தானே நாங்க உன்னை பார்க்க வந்தோம்."

"அறியும். ஆனாலும் அவன் பரிகாரம் செய்து விட்டதால அவன் போயாகணும்."

"புடலங்கா... அதை எதுக்கு நீ அவனுக்கு சொல்லிக் கொடுத்தே..."

"அது எண்ட கடப்பாடு. இவ்விடத்துல புடலங்கா போல வார்த்தைகள் பறையான் பட்டில்லா... என்னோட கோபம் நின்னை எரிக்கும் ஜாக்கிரதை..."

பிள்ளை பட்டத்திரி போட்ட போடில் சற்று அடங்க சந்திரசேகர் கேட்டார்.

"உங்களை நம்பி வந்த என்னை இப்படியா ஏமாத்தறது?"

"நான் எங்க ஏமாத்தினேன்?"

"உங்க யட்சி அவனை துரோகின்னு சொல்லலியா? அதைக்கேட்டு தானே எனக்கு சகாயம் செய்ய முன் வந்தீங்க."

"வாஸ்தவம். ஆனால் அவன் பரிகாரம் செய்ய முன் வந்ததால ஆ துரோகம் அழிஞ்சு போகும்..."

"என்ன பெரிய பரிகாரம்...?"

"நோக்கு அவ்விட..."-பட்டத்திரி கைகாட்டிய திக்கில் அந்த தங்கப் பாத்திரங்களின் அணி வகுப்பு. வழிய வழிய ரத்தமுடன் அவை சடல நெருப்பில் பளபளப்பது நன்கு தெரிகிறது.

"என்ன அது?"

"சொர்ண பாத்திரம் அதில் ரத்தம் சதுர்வேதியிண்ட தேக ரத்தம். பூத பிரேத பிசாசுகளின் தாக சாந்திக்கு..."

"பட்டத்திரி நீ என்னென்னவோ சொல்றே? எனக்கு என் வியாபாரம் தடை படக்கூடாது. சதுர்வேதி முன்னுக்கு வந்தா வந்துட்டு போகட்டும். என்னைப் போட்டு



பார்த்துட்டு அவன் முன்னுக்கு வரக் கூடாது. அது எனக்கு முக்கியம்..."

-சந்திரசேகரின் முன் பட்டத்திரி நெடுநேரம் யோசிக்கிறான்.

யட்சியை அழைக்கிறான். ஏதோ பேசுகிறான். இவர்கள் காதில் விழாத சமிஞ்சை பாஷை! பின்னர் இவர்கள் பக்கம் திரும்புகிறான்.

"யட்சி அபயம் தந்து..." என்கிறான்.

"என்ன, என்ன?"

"நீயும் இதுபோல பரிகாரம் செய்தால் ரட்சிப்பு உண்டு. அவனாலும் உனக்கு பாதிப்பு வராது..."

"இது என்ன பரிகாரம்?"

-பட்டத்திரி சொல்லி முடிக்கவும் சந்திரசேகர் விடைத்து விதிர்க்கவும் சரியாக இருந்தது.

பிள்ளை மட்டும் அவ்வளவு விடைத்த மாதிரி தெரியவில்லை.

"சரின்னு சொல்லுங்க..." என்கிறார் சந்திரசேகரிடம்.

"யோவ் எவ்வளவு தங்கம்னாலும் தந்துடலாம். இந்த மாதிரி வெட்டிகிட்டு ரத்தம் எடுக்கறதை நினைக்கக் கூட முடியலையய்யா என்னால..."

-பட்டத்திரி அதைக் கேட்டு சிரிக்கிறான்.

"ஆ சதுர்வேதி இம்மி அச்சமும் இல்லாம ரத்தம் கொடுத்து ஈயாளு எந்தா இந்தா கோழையோ..."

சந்திரசேகரிடம் அதைக் கேட்டு மிளகாய் பொடிபட்ட மாதிரி ஒரு கார உணர்வு. பிள்ளையோ கிள்ளி விடப்பட்ட மாதிரி குதிக்கிறார்.

"என்னங்க நீங்க சரின்னு சொல்லுங்க ஒரு தடவை தானே-அப்புறமா காலம் பூரா சந்தோஷமா இருக்கலாங்க..."

சந்திரசேகர் அரை மனத்தோடு சம்மதிக்கிறார்.

வியாபார விருத்திக்காக ரத்தம் சிந்தி உழைப்பது என்பது இது தானா?

## 9

**சா**த்தான் பொறி தின்று கொண்டிருந்தது.

வடிவம் தெரியவில்லை. ஆனால் யாரோ நடக்கும் சப்தம் கேட்கிறது.

பிரமிப்பாக இருக்கிறது சதுர்வேதிக்கு!

நிர்வாணமாக நின்று கொண்டு இதைச் செய்யும் போது கொஞ்சம் வெட்கமாகவும் இருக்கிறது.

நேற்று பொறி போட கொஞ்சம் தாமதமாகிவிட்டது. அருகில் வந்து அடிக்கடி யாரோ உரசுவது போல் பிரமை தட்டியது. பளபளப்பான மேடுபள்ளமில்லாத சமனமான தரையில் நடக்கும் போதும் காலை இடறியது. அப்போதும் இந்த பொரி சமாசாரம் பொறி தட்டவில்லை.

திடீரென்று மூக்கில் சில்லிப்பு. ஐஸ் கட்டி உள் ஏறி உட்கார்ந்து கொண்ட மாதிரி ஒரு உணர்ச்சி. மளமளவென்று ரத்தம் கொட்டத் தொடங்கி மார்புச் சட்டையை ரத்த சகதியாக்கிவிட்டது.

எதனால இப்படி?

டாக்டர் வந்தார்... சோதித்தார்... அவருக்கு ஒன்றும் பிடிப்பட்ட மாதிரி தெரியவில்லை.

"எல்லாமே நார்மலா தான் இருக்கு... ஆனா ரத்தம் வந்திருக்கு. சில்லி மூக்கு உடைஞ்சிருச்சோ?"



மண்டையை பிய்த்துக் கொண்டார் அவர். அவர் போன பின்பு படுக்கையில் சோர்ந்துப் போய் மல்லாந்த சதுர்வேதியின் காதுகளில் இப்போது எங்கேயோ, யாரோ, எதையோ சுரண்டுவது போல் ஒரு சப்தம்.

எங்கிருந்து வருகிறது என்றும் அனுமானிக்க முடியவில்லை.

திணறிப் போன சதுர்வேதிக்கு பயத்தினால் முகம் வெளிறி கண்டங்கால் துடிக்கிறது.

இந்த மாதிரி திணறலான நேரங்களில் சதுர்வேதிக்கு குடிக்கத் தோன்றும் சரி ஊற்றிக் கொள்வோம் என்று விஸ்கியை தேடி பீரோவை திறக்கப் போன போதுதான் அந்த முறமும் பொரியும் ஞாபகத்துக்கு வந்தது.

மைகாட்...!-பதறிப் போய் பொரியை எடுத்து நிர்வாணாக்கி வீசி எறிந்தபோது அது மறைந்து போன விதத்தில் ஒரு ஆவேசம் தெரிந்தது. நடுநடுவே அதிபயங்கர சிரிப்பொலி வேறு தோன்றியது. சதுர்வேதிக்கு புரிந்து போய்விட்டது. ரத்தம் சப்தம் எல்லாவற்றுக்கும் காரணம் இந்த குட்டிச்சாத்தான் தான் என்று.

ஒரு நாள் ஒரு பொழுது மறந்ததற்கே இத்தனை இடைஞ்சல்.

அதுதான் இன்று ஞாபகமாய் தாமதமில்லாமல் விஷயத்தில் இறங்கிவிட்டான். பொரி போட்டு முடிந்த பிறகு பெரியதாய் ஒரு ஆசூயை. படுக்கையில் மல்லாந்து வியாபாரம் பற்றி கவலைப்பட ஆரம்பிக்கிறது மனது.

"பரிகாரம் செய்துமுடித்தாகிவிட்டது. இனி வியாபாரம் நிச்சயம் செழிக்கத் தொடங்கிவிடும்.

நிச்சயமாக சந்திரசேகரை இந்த முறை முந்திவிடலாம்.

நாளைக்கு எல்லா இடங்களிலும் உற்பத்தியை முடுக்கி விடவேண்டும். இள ரத்தம்-டார்கெட் ஆசீவ் செய்தால் லட்சக்கணக்கில் இன்சென்டிவ்! போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ் குரூப்பில் அங்கம் வகிக்கும் வாய்ப்பு! சாதிக்கவேண்டும்.

நினைத்தபடியே சதுர்வேதி அப்படியே தூங்கிப் போனார். நெடு நாள் கழித்து ஒரு நல்ல தூக்கம் தூங்குவது போல் தெரிகிறது.

சந்திரசேகரின் அகல்யா இன்வெஸ்ட்மென்ட்ஸ்-சீட்டுக் கம்பெனியில் சரியான கூட்டம்.

பத்தாயிரம் டெபாசிட் செய்தால் மூன்று வருஷத்தில் இருமடங்கு கூடவே ஐந்து சதம் உடனடி இன்சென்டிவும் அரை பவுன் மோதிரமும்...!

அதுதான் அத்தனை கூட்டம்.

கூட்டத்தை பார்ப்பவர்கள் இந்தியா ஏழை நாடு என்பதை நம்ப மாட்டார்கள். இலவசமாக ஏதாவது தருகிறார்கள் என்றால் கண்ணை மூடிக்கொண்டு இறங்கும் படு பாமரத்தனமான செயலைச் செய்ய அன்று அந்த ஆபீசில் கிட்டத்தட்ட அறுபது பேர் கொண்ட வரிசை. ஊழியர்களிடம் திணறலான திணறல். இதில் சிலரிடம் அதி விழிப்புள்ளது போன்ற தோற்றம்.

"ஏங்க எப்படி இவ்வளவு வட்டி தர முடியுது?"

"எப்படின்னா... எங்க குரூப் கம்பெனியில் டெவலப்மென்ட்டுக்கே பணம் போதலை. அவ்வளவு கம்பெனியும் அபார லாபத்துல வேற ஓடுது. அது தெரியும் தானே உங்களுக்கு..."

-விழிப்பாளிகளிடம் வாய் நிறைய பல்.



"இந்த அரைபவுன் மோதிரம்?"

"அது எங்க முதலாளியோட தாராள மனசுங்க. இந்தியாவுல சேமிக்கிற பழக்கம் வளர அவர் தந்துகிட்டிருக்கிற பரிசு..."

-ஊழிய விளக்கங்கள் சற்றே மானேஜர் சீட்டில் பத்மநாப பிள்ளையின் காதுகளிலும் விழுந்து கொண்டிருக்கிறது.

வாஸ்தவத்தில் இந்த தங்க மோதிரம் ஐடியா அவருடையது தான்!

ஒரு சூட்கேஸ் நிறைய தங்கம் ஒரு முறை விமானத்தில் அநாதையாக கிடந்தது. கஸ்டம்ஸ் கலெக்டர் ஒருவர் கையில் முறைப்படி வந்து சேர்ந்தது.

அன்று மட்டும் இப்படி தானாகவும், அவராகவும் பிடித்த தங்கத்தின் மதிப்பு கிட்டத்தட்ட எண்பது கிலோ! ராஜவேட்டை.

அதில் ஒரு ஐம்பது கிலோவை அவர் சந்திரசேகருக்கு அல்பமாய் பத்து கோடிக்கு தள்ளி விட்டார். இன்று அவர் ஒரு விஸ்வாசி! இது இது ராஜ ரகசியத்தை விட ரகசியமான விஷயம்.

சந்திராவின் அந்த பத்து கோடியும் கூட கறுப்புப் பணம். ஆயிரம் ஐநூறு ரூபாய் தாள்.

அதை சென்ட்ரல் கவர்மென்ட் செல்லாத நோட்டாக்கப் போவதாக ஒரு வதந்தி உலவிய நேரம். சந்திரசேகர் பயந்து கொண்டு தங்கங்களுக்கு அந்த விலை தந்து பாளம்பாளமாய் கட்டிகளை வசப்படுத்திக் கொண்டார்.

அதில் ஒரு சிறு பாளங்கள் தான் இப்போது மோதிர அவதாரம் எடுத்து ஊக்கப்பரிசு இப்படி போய்க்

கொண்டிருக்கிறது. கொஞ்சம்... சந்திரசேகரின் பங்களாவில் சுவரிலோ, தரையிலோ அல்லது கக்கூஸிலோ மிக பாதுகாப்பாக உள்ளது.

பிள்ளைக்கு இந்த கதை தெரியும். ஆனால் பணக்கார சங்கதிகளில் நாம் எச்சரிக்கையாக இல்லாவிட்டால் ஆபத்து என்று வாய் மூடிக் கொண்டிருக்கிறார்.

அனேகமாய் அந்த தங்கம் தான் வெளியே வந்து பாத்திரமாகப் போகிறதோ?

எக்ஸாக்ட்லி!

தங்கப் பாளத்தை பார்க்கும் ஆசாரி காதுவரை கண் திறக்கிறான் எடை போடுகிறான். ஐநூறு கிராம்.

"அவ்வளவுக்குமா பாத்திரம் செய்யணும்?"

"ஆமா மொத்தம் நாலு... கால்படி ரத்தம் கொள்ளணும்."

"ரத்தமா?"-ஆசாரிக்கு விதிர்ப்பு.

"சும்மா சொன்னேன்யா..." பிள்ளை சமாளிக்கிறார்.

"பாத்திரம் எப்ப வேணும்?"

"இன்னிக்கு கிடைக்குமா?"

"நாலு நாள் குறையாம வேணும்."

"சரி பண்ணித்தா. பின்னமில்லாம பண்ணு. சுத்தத் தங்கமய்யா. நடுவுல எதையாவது கலந்து எனக்கே பொடி போட்டு விட்டுடாதே..."

"சேச்சே... எதுக்குங்க இது?"

"முதலாளிங்க சமாசாரம். மூடிட்டு சொன்னதை மட்டும் செய்..."



-ஆசாரி வாங்கிக் கொள்ள-பிள்ளை உடனே கிளம்ப ஆசாரி வீட்டு வாசலில் சதுர்வேதியின் காரும் வந்து தேங்கக் காண்கிறார்.

"இந்த ஆள் எதுக்கு திரும்ப வர்றான்?"

சதுர்வேதி முறைத்தபடி கீழ் இறங்கி உள் நுழைகிறான். ஆசாரி எல்லாவித வணக்கமும் சொல்லி வரவேற்க சதுர்வேதி முகம் ஆசாரியின் கையில் உள்ள அந்த தங்கப் பாளத்தை பார்க்கிறது.

"என்ன ஆசாரி... புது வரவா... பெரிய வேலை கிடைச்சிடிச்சோ?"

"அப்படித்தாங்க... உங்க விஷயம் மாதிரியே தங்கப் பாத்திரம்!"

-சதுர்வேதிக்கு கருக்கென்றது.

"சரி சார் வந்த விஷயம்?"

"திரும்ப தங்கப் பாத்திரம் வேணும் ஆசாரி.

"அவரும் வேணும்கறாரு... நீங்களும் வேணும்கறீங்க. என்ன விஷயம்?"

-சதுர்வேதி மௌனம் காக்கிறான்.

"சந்திரசேகர் உனக்கெதற்கு தங்கப் பாத்திரம்?"

"சந்திரசேகர் உனக்கெதற்கு தங்கப் பாத்திரம்?" மனதில் கேள்வி சுமக்கிறான். விடை பட்டத்திரியிடம் போனால் தான் தெரியும் என்பதால் அங்கிருந்து நேராக பட்டத்திரியை நோக்கித்தான் கார் விரைகிறது.

காலை பட்டத்திரியிடம் இருந்து ஒரு சேதி-உடனடியாக மேலும் நான்கு தங்கப் பாத்திரங்களுடன் இன்று இரவே வந்து பார்க்கச் சொல்லி... சொன்னவன் இருவருக்குமான இணைப்புப் பாலம் தேவராஜ்.

"எதுக்கு தேவராஜ்?''

"தெரியாது சார். பட்டத்திரி சொன்னால் அர்த்தம் இருக்கும்.''

அது என்ன அர்த்தமா இருக்கும்? சந்திரசேகரும் தங்கம், ரத்தம், என்று இங்கேயும் போட்டிக்கு வந்து விட்டானா?

# 10

டிரைவரை நடுவழியில் இறக்கி விட்டு விட்டுத் தானே காரைக் கிளம்பிக் கொண்டு மயானப் பாதை நோக்கி விரைகிறான்.

அடிக்கடி இப்படி ஒரு கார் அந்த மணல் சாலை மேல் புழுதி பறக்க வருவதை குடிசைவாசிகள் பார்ப்பதும் அவர்களின் குஞ்சும் குளுவான்கள் காரைப் பின் தொடர்ந்து ஓடுவதும் இப்போதெல்லாம் சகஜமாகி விட்டது.

குறிப்பாக கம்மாக்கரை மேட்டுமேல் ஒரு குடிசைவாசி குறப்பு ஜமக்காளம் மூடி கார் வந்து போகும் நேரத்தைப் பார்ப்பதை ஒரு தொழிலகமே செய்கின்ற மாதிரித் தெரிகிறது.

சுடுகாட்டுக்குள் ஒரு பணக்காரச் சவச் சடங்கு!

மாஜிஸ்டிரேட் லெவல் ஆட்களின் விஜயம்.

வாசல் வரை வந்து விட்ட சதுர்வேதியைப் பார்த்துவிட்ட அவர்கள் முகங்களில் ஆச்சரிய ரேகை!

சதுர்வேதியிடமும் திணறல்.

"எங்க சார் நீங்க... இறந்துட்டவருக்கு இறுதி மரியாதை செலுத்தவா...?''



"ஆ...ஆ...ஆமாம்! வீட்டுக்கு போக நேரமில்லை அதான் தோ இங்கேயே...''

"சிதைக்கு தீ வெச்சாச்சு சார்...''

"அடடா... கொஞ்சம் லேட்டாயிடுச்சு,''

"வேணும்னா அதோ இறந்துட்டவர் மகன்-தெரியும்ல...''

"இல்ல அவ்வளவு பரிச்சயமில்லை-அதனால என்ன துக்கம் கேட்க இதெல்லாம் ஒரு விஷயமில்ல...''-சதுர்வேதி அழுதபடி வெளியே வரும் அந்த நபரை நெருங்கி கைகளைப் பற்றும் போது தான் தெரிகிறது-அவன் க்ரைம் பிராஞ்ச் இன்ஸ்பெக்டர் ரவிச்சந்திரன் என்று!

அந்த சோகமான சூழ்நிலையில் இறந்த நபரை எப்படித் தெரியும் அந்த பழக்கம் எப்படிப்பட்டது என்றெல்லாம் பேச முடியுமா என்ன?

ஆனாலும் சதுர்வேதியே வந்து நேரில் விசாரிக்கும் அளவு ஒரு உறவு சதுர்வேதிக்கு ரவிச்சந்திரனுக்கும் இருப்பதாக மற்றவர்கள் நினைக்க இது பெரிய வாய்ப்பாகி விட்டது.

அந்த மற்றவர்கள் தாங்கள் ஏறி வந்த வாகனங்களில் கிளம்பி விட்டார்கள். சதுர்வேதி மட்டும் அகலாமல் உள்ளே எரி சிதையை பார்த்துக் கொண்டு காலத்தை கடத்திவிட்டு வெளியே வரவும் மயானம் மனிதக் கூட்டம் இல்லாமல் மௌனத்தில் இருந்தது.

அதோ எதிர் சாரியில் தட்டிமரமும்-பட்டத்திரி குடிசையும்.

உள்ளே எட்டிப்பார்க்கவும் பட்டத்திரி நல்ல தூக்கத்தில் இருப்பது தெரிந்தது. கால் மாட்டில் ஒரு ஆந்தை உட்கார்ந்து கொண்டிருந்தது.

திடும்மென்று காலை ஏதோ ஒன்று உரச சப்தம் கேட்டு பயந்து துள்ளிக் குதித்தபோது சீறி ஓடியது உடம்பு.

ஓடிப்போய் பட்டத்திரி அருகே படுத்துக் கொண்டது. பட்டத்திரி தூக்கம் கலைந்து கண் விழிக்கிறான்.

''ஆராது...''

''ராத்திரியல்லோ வரச் சொன்னேன்.''

''அந்த சந்திரசேகரும் தங்கப் பாத்திரம் செய்யறான் போல இருக்கே... அதான் இப்பவே வந்துட்டேன்.''

''ஓ... அதுவா சேதி ஹஹ்ஹா... ஹா...'' பட்டத்திரியிடம் அலட்சியமாய் ஒரு சிரிப்பு.

''பட்டத்திரி இது என்ன சிரிப்பு... நீ எனக்கு துரோகம் செய்யற மாதிரி தெரியுது.''

''எனக்கு யாருக்கும் துரோகம் செஞ்சு பழக்கமில்லை சதுர்வேதி.''

''அப்படின்னா அந்த சந்திரசேகர் எதுக்கு தங்கப் பாத்திரம் செய்ய வந்தான்?''

''அவனும் உன்னை மாதிரி எனக்கு சிஷ்யன். யார் எண்ட இடத்தில் வந்து சகாயம் செய்யச் சொன்னாலும் நான் சகாயம் செய்யும்.''

''பாலுக்கும் காவல்-பூனைக்கும் தோழனா நீ?''

''உனக்கு என்ன வேணும் அதை மட்டும் கேள் நீ.''

''எனக்கு என் வியாபார முன்னேற்றம்.''

''உண்டாகும் போ. அடுத்த ஆள் பற்றிப் பேசாதே.''

''என் முன்னேற்றமே சந்திரசேகர் அழிவிலதானே இருக்கு.''

''வேண்டாம்-அவனும் வாழட்டும்-நீயும் வாழ்.''



''முடியாது. அவன் வாழக் கூடாது. அவன் ஒரு துரோகி.''

''எங்கில் நீயும்கூட துரோகியல்லோ?''

''இனி ஞான் உனக்கு சகாயம் செய்யான்பட்டில்லா...''

''நல்லது. உன்னைவிட ஒரு பெரிய ஆள் இல்லாமலா போயிடுவான். நான் அவனைப் போய் பாக்கறேன்.''

''வேண்டாம் விலகிப்போ-நீ அழிஞ்சு போவாய்.''

''அழிஞ்சாலும் அழிவேன்-ஆனால் உன் துரோகத்தை ஒத்துக்க மாட்டேன்.''

-சதுர்வேதி பேசிக் கிளம்பின மறுநொடி அந்த தட்டி மரக் குடிசை பின்னால் இருந்து பிள்ளையும் சந்திரசேகரும் வெளியே வருகிறார்கள்.

சந்திரசேகர் முகத்தில் சவக்களை.

பிள்ளை பேசுகிறார்.

''பாத்தீங்கல்ல... சதுர்வேதிக்கு நீங்க அழியணும். அதான்குறி. பட்டத்திரியா இருக்கவும் நமக்கு சகாயம் செய்யறாப்படி.''

''யோவ்... இப்ப அவன் அடுத்து என்னய்பா செய்வான்?''

''என்ன கள்ளந்திரி கேசவன் நம்பூதிரியைப் போய் பார்ப்பான்.''

''யார் அவன்?''

''பட்டத்திரி மாதிரியே அவனும் ஒரு மாந்திரீகன்.''

''மாந்திரீகன் மட்டுமில்ல என்னோட குருவும்கூட...'' பட்டத்திரி இருவர் பேச்சிற் கிடையிலும் உள் நுழைகிறான்.

''என்னது உங்க குருவா?''

"ஆமாம்... சந்திரசேகர் அவன் எண்ட குருவின் சகாயம் கிட்டி ஏதாகிலும் உபத்ரவம் ஞங்களுக்கு செய்தால் என்னால் ஒரு சகாயம் உங்களுக்கு செய்ய முடியாது. ஞங்கள் மாந்திரீக சம்பிரதாயங்களில் குருபக்தியே பிரதானமாகும். ஞான் எண்ட குருவின் கட்டுக்கள் எதையும் அவிழ்க்கான் பட்டில்லா. என்னை ஷமிக்கணும்."

-சந்திரசேகர் முகம் அதைக் கேட்டு சுணங்குகிறது. பிள்ளையைப் பார்க்கிறார்.

கத்தி போய் வால் வந்த கதையா இதென்ன?

பிள்ளை தைரியம் சொல்கிறார்.

"கவலைப்படாதீங்க சார்... அவன் கேசவன் நம்பூதிரியைப் பார்த்தா நாம அவனுக்கு மேல ஒருத்தனை பார்ப்போம்."

பட்டத்திரியிடம் அதைக் கேட்டு சிரிப்பு.

"ஏன் பட்டத்திரி சிரிக்கிறே?"

"உங்களோட போட்டிய நினைச்சா வேற என்ன செய்ய...?"

"நான் போட்டி போடலை பட்டத்திரி. போட்டிக்கு வந்ததெல்லாம் அவன்தான் என்னை அழிக்க நினைக்கறது அவன்தான்."

"அப்படி என்ன உங்கமேல அவனுக்கு பகை?"

"எனக்கு தெரியலை... தொழில் போட்டியத் தவிர வேற என்ன இருக்கு முடியும்?"

"இல்லை அதுக்கு மேல ஒண்ணு இருக்கு...

"எதுவும் இல்லை பட்டத்திரி."

"பொதுவில் நீ ஏதாகிலும் பெரிய துரோகம் செய்ததுண்டோ?"



"நானா... துரோகமா... சேச்சே."

"கள்ளம் பறையாண்டா சந்திரசேகர். நீ சத்யம் பறஞ்சால் நான் நின்னை காப்பாற்றும்."

"எனக்கு அதுக்கெல்லாம் நேரமில்லை. அவசியமுமில்லை."

"ஒரு செகண்டில் நான் சத்யம் அறியும்-அறியட்டோ? எண்ட யட்சி சகலமும் பறையும்."

-சந்திரசேகர் நெடுந்தொலைவில் நிறுத்தியிருந்த காரை நோக்கி நடக்கிறார். நடையில் உயிர்ப்பில்லை. பிள்ளை பின் தொடர்கிறார். ஓடிப் போய் உடன் சேர்ந்து நடந்தபடி புலம்பத் தொடங்குகிறார்.

"சார் என்ன சார் இது. மலுக்குன்னு முறிச்சிகிட்டு வந்துட்டீங்க. இது நல்லதுக்கில்ல."

"எதுய்யா நல்லதுக்கில்ல. நான் துரோகியா? சொல்லுய்யா நான் துரோகியா?"

"பட்டத்திரி அர்த்தமில்லாம பேசமாட்டான்."

"என்னய்யா பெரிய அர்த்தம். அந்த சதுர்வேதி துரோகி. நான் துரோகியல்ல. எவ்வளவு பணம் வேணும்-தரேன்! எனக்கு காரியம் நடக்கணும-கச்சிதமா நடக்கணும். நடுவுல இது என்ன மிரட்டலா நீ துரோகம் செய்தியா செய்யலையான்னுல்லாம் கேட்டுகிட்டு?"

"போகட்டும். நீங்க துரோகியில்லைன்னுட்டீங்க. அதோட விடவேண்டியதுதானே? எதுக்கு படபடப்பு இந்த கோபம்?"

"படபடப்பா. உன்னை ஒருத்தன் துரோகின்னு சொல்லட்டும். அப்ப தெரியும். நான் கோடீஸ்வரன்-ஒரு பெரிய எம்.டி. போனாபோகுதுன்னு இப்படிசுடுகாடு-

பரிகாரம்னு வந்தா என்னை ஒரு கிழட்டுப்பய இப்படித்தான் கேள்வி கேக்கறதா?''

-இதற்குள் கார் வந்துவிட்டது. ஏறி அமருகிறார் சந்திரசேகர். தொற்றிக் கொள்கிறார் பிள்ளை.

''கொஞ்சம் பொறுமை காட்டுங்க சார். பட்டத்திரி ஒண்ணும் லேசுப்பட்ட ஆள் கிடையாது. மனசு வெச்சா இந்த தேசத்துக்கே ஜனாதிபதி ஆகமுடியும். அவ்வளவு வித்தை தெரிஞ்ச ஆள்.''

-சந்திரசேகர் காரை பயங்கர கோபத்தோடு ஸ்டார்ட் செய்கிறார்.

''தோ பாருய்யா... உன் பேச்சை கேட்டு நான் இவ்வளவு தூரம் வந்தேன் பாரு. நீ இதையும் சொல்வே இதுக்கும் மேலையும் சொல்வே. எனக்கு அட்வைஸ் பண்ண ஏ.சி. எஸ்சும், ஐ.ஏ.எஸ்.சும் இருக்காங்க. நீ இனிமே வாயைத் திறக்கக்கூடாது.''

கார் சீறத் தொடங்கியது.

பிள்ளை வாயை மூடிக் கொண்டார்.

பட்டத்திரி தொலைவில் இருந்து அதைப் பார்த்து மர்மமாய் சிரித்து கொள்கிறான்.

பட்டத்திரி மட்டுமா? அந்த கம்மாக்கரை குடிசைக்காரனும் தான்!

## 11

**கா**ர் அசுரவேகத்தில் போர்டிகோவில் நுழைந்து தேங்குகிறது. இறங்கி நடக்கும் சந்திரசேகர் நடையில் அனல் பறக்கிறது. எங்கு போனார்? எதற்கு போனார்? என்று தெரியாத பி.ஏ. ஓடி வருகிறான். ஒரு பெரிய ஃபைலுடன் அக்கவுண்டண்டும் காத்திருக்கிறார்,



பின்தொடரும் பிள்ளையை இருவரும் பிடித்துக் கொள்கின்றனர்.

''மிஸ்டர் பிள்ளை. எம்.டிஐ எங்க இழுத்துகிட்டு போயிட்டு வர்றீங்க?''

''உம் சுடுகாட்டுக்கு! போங்கய்யா.'' பிள்ளையிடம் சீற்றம்.

''யோவ். இங்க ஏகப்பட்ட கையெழுத்து வாங்கியாகணும்.''

''ஆமாம் சார் ஏகப்பட்ட அப்பாய்ன்ட்மெண்ட்ஸ் இருக்கு.''

''அதுக்கு நான் என்ன பண்ண? சார் மூட் அவுட்.''

பதில் சொல்லிவிட்டு திரும்பிப் பார்க்கிறார் பிள்ளை. சந்திரசேகரை காணவில்லை. தன் அறைக்குள் போய் தாழ்போட்டுக் கொண்டவிட்ட மாதிரி தெரிகிறது.

ஆமாம்!

ஒசத்தியான வெளிநாட்டு சரக்கை ஃபிரிட்ஜிலிருந்து எடுத்து ஊற்றிக் குடிக்க ஆரம்பிக்கிறார் சந்திரசேகர்.

எவ்வளவு குடிக்க முடியுமோ அவ்வளவு?!

பொத்தென்று படுக்கையில் விழுகிறார்.

மனதின் அந்தரங்கப் பகுதியின் முக்கிய கதவின் பூட்டை யாரோ திறந்துவிட்ட மாதிரி ஒரு பயம். உள்ளே என்ன இருக்கிறது என்று எட்டிப்பார்த்துவிட்ட மாதிரி ஒரு நடக்கம்.

குடித்ததால் திரும்பவும் அந்தக்கதவை பூட்டி சாவியை பத்திரப்படுத்திக் கொண்டதுபோல் ஒரு நம்பிக்கை. மயக்கம் அவரை ஆக்கிரமிக்கிறது.

அவரை மட்டுமா?

கிட்டதட்ட சதுர்வேதியும் இதே நிலையில்தான் இருந்தான், ஆனால் இங்கே அருகில் தேவராஜ் அனுமதிக்கப்பட்டிருந்தான்.

''சார். நீங்க இப்படி பட்டத்திரியை பகைச்சுகிட்டு இருந்திருக்க வேண்டாம்'' என்கிறான்.

''தேவராஜ் அது முடிஞ்ச கதை. அதை பேசாதே-கள்ளந்திர் நம்பூதிரியை பார்க்க ஏற்பாடு செய்.''

''அப்படி என்ன சார் பட்டத்திரி உங்களுக்கு துரோகம் செய்திட்டார்?''

''பேசாதேன்னு சொன்னேன்ல? பட்டத்திரி எனக்கு உதவி செய்ய ஆரம்பிச்சுட்டு சந்திரசேகருக்கும் உதவி செஞ்சா என்னய்யா அர்த்தம்?''

''பட்டத்திரி பொதுவான ஆள். தன்கிட்ட வர்றவங்களுக்கு உதவத்தான் செய்வார். கோவிலுக்கு நாலு விதமான மனுஷங்க போகத்தான் செய்வாங்க. அதை தடுக்க முடியுமா?''

''எனக்கு துரோகிகளைப் பிடிக்காது, துரோகிகளுக்கு உதவறவங்களையும் பிடிக்காது.''

''சார். அப்படிப்பார்த்தா நீங்கதானே துரோகி. நீங்கதான் அவர் பிசினஸ்ல குறுக்க நுழைஞ்சு அவரை பின்தங்க வெச்சீங்க.''

தேவராஜின் கேள்வி முன் நெடுநேரம் சதுர்வேதி மௌனம் காக்கிறான். விஸ்கியை தேடி எடுத்து முழுங்குகிறான். போதை ஏற ஏற, நரம்பு முறுக்குகள் தளரத் தளர உண்மையை சொல்லிவிடலாமா என்று தோன்றுகிறது.

''என்ன சார் பதிலைக் காணோம்.''



''சொல்றேன். சொல்றேன். மேலோட்டமா பார்த்தா நான்தான் துரோகியா தெரிவேன். ஆனா சந்திரசேகர் எவ்வளவு பெரிய அயோக்யன் தெரியுமா?''

''என்ன சார் சொல்றீங்க?''

''ஆந்திராவுல இருந்து நான் இங்க வந்து பிசினஸ் பண்ண ஆரம்பிச்சதே சந்திரசேகரை ஒழிக்க தான்-அவனை நடுத் தெருவுல நிறுத்தத் தான்.''

''அப்படி என்ன கெடுதல் சார் அவர் உங்களுக்கு செய்தார்?''

''சந்திரசேகர் செஞ்ச கெடுதல் பத்தி இப்ப என்னால எதுவும் சொல்ல முடியாது. ஆனா அவனை ஒழிக்கற விஷயத்துல நான் எந்த உயரத்துக்கும் போவேன். யாரையும் பார்ப்பேன்.''

''அப்ப நம்பூதிரியை பார்த்தாகணும்கறீங்களா?''

''ஆமா.''

''சார் பட்டத்திரியோட குட்டிச்சாத்தானை என்ன பண்ணப் போறீங்க?''

''எல்லாத்துக்கும் விடையை நம்பூதிரியே சொல்லட்டும்.''

''சரி சார். நான் நம்பூதிரியை பார்த்துட்டுவரேன்.''

-தேவராஜ் நகர்ந்து கொள்ள சதுர்வேதி சரிகிறான்.

நினைவுகளில் பின்னோக்கிய பயணம்.

சதுர்வேதியின் தங்கை மௌஷ்மி பார்க்க நதியா வாட்டம் இருப்பாள். மௌஷ்மியின் கணவன் தீரஜ் ஒரு கஸ்டம்ஸ் ஆபிசர்.

ஒரு வேட்டையில் அநியாயத்துக்கு தங்கம் மாட்டிற்று குறுக்கில் தீரஜ் அதை சந்திரசேகரிடம் விற்க முன் வந்தான். எல்லாம் அண்டர் கிரவுண்ட் பிசினஸ்.

அப்போது சந்திரசேகர் இத்தனை பெரிய பிசினஸ் மேன் இல்லை. பணத்துக்காக ஆலாய் பறந்த நபர்.

கையில் சில லட்சங்களோடு மேலும் பல லட்சங்களுக்காக பிசினஸ் பார்ட்னர் தேடி அலைந்தவர்.

இந்த சமயத்தில் தான் தீரஜின் தங்கப்பெட்டி சந்திரசேகர் முன்னால் திறந்தது. மார்க்கெட் ரேட்டில் தங்கம் என்ன விலையோ அதில் சரிபாதி என்று முடிவாயிற்று.

திருட்டு சரக்குக்கு இது நல்ல விலைதான்.

ஆனால் அதில் கூட சந்திரசேகர் ஏமாற்று வேலை செய்தார். தீரஜிற்கு கள்ள நோட்டாக தந்து ஏமாற்றினார்.

அதை மாற்ற முயன்ற இடத்தில் தீரஜ் மாட்டிக் கொண்டு கம்பி எண்ணும்படியாயிற்று. உண்மையை சதுர்வேதியிடம் மட்டும் சொன்னான் தீரஜ்.

இன்னும் தீரஜ் திகார் ஜெயிலில் ஒரு கைதி.

இங்கோ சந்திரசேகர் ஒரு பெரிய தொழிலதிபர் பண்பாளர், பக்திமான்!

இந்த விஷயங்களை வெளியில் வைத்து பேச முடியாது. சட்டத்திடம் போய் நியாயம் கேட்டு நிற்க முடியாது. தங்களுக்குள் தீர்த்துக் கொண்டால் தான் ஆயிற்று.

அதற்கு சந்திரசேகருக்கு சமமாக சதுர்வேதி வளர்ந்தால்தான் சாத்தியம். இதற்கெல்லாம் ஒரே வழி சந்திரசேகரின் அதே பாணி தான். திருட்டுச் சரக்கு கொள்முதல் அதை உருவம் மாற்றி மார்க்கெட்டில் விநியோகித்தது.

வைரத்தை வைரத்தால் அறுத்தல். சதுர்வேதியும் இதன் காரணமாய் முட்டி முட்டி நிறைய தங்கம் வாங்கி



மார்க்கெட்டில் முதலீடு செய்து வெளி உலகத்திலும் ஒரு பெரிய தொழிலதிபராக உலாவரத் தொடங்கியாயிற்று.

ஆனால் பழிவாங்கும் அந்த நெருப்புக்கு மேலும் ஒரு சமயம் தேவைப்பட்டபோதுதான் பட்டத்திரி பற்றி தெரிய வந்தது. பட்டத்திரியும் உதவத்தான் செய்தான்.

ஆனால் இப்படியா அந்த உதவியும் திசைமாறிப் போகும்.

நினைக்க நினைக்க சதுர்வேதிக்கு சங்கடம் பொங்கி யெழுகிறது. உரக்க அழவேண்டும் போல இருக்கிறது. இந்த மாதிரி தருணங்களில் மெளஷ்மி தான் ஆறுதல் சொல்வாள்.

டெலிபோனைச் சுழற்றி மறுமுனையில் மெளஷ்மியை பிடிக்கிறான் சதுர்வேதி.

''என்னண்ணா.''

''எப்படிடா இருக்கே?''

''நான் நல்ல இருக்கேன். இன்னிக்கு கூட பர்மிஷன் வாங்கி அவரை பார்த்துட்டு வந்தேன். சந்திரசேகர் எப்படி இருக்கான்? வெளியே வந்து அவனைக் கொல்லாம விடமாட்டேன்னு பொருமிட்டார்.''

''கவலைப்படாதே. தீரஜ் இன்னொரு தடவை ஜெயிலுக்கு போக வேண்டி வராது. நானே எல்லாத்தையும் முடிச்சிடுவேன்.''

''எல்லாத்தையும்னா கொன்னுடப் போறியா?''

மறுமுனையில் மெளஷ்மி பயப்படுவது நன்கு தெரிகிறது,

''உயிரோட வெச்சு கொல்லப் போறேன் மெளஷ்மி.

''புரியலைண்ணா எப்படி?''

''நிறைய வழிகள் இருக்கு.''

"எதாவது வர்மதாக்குதல் பண்ணி கிண்ணி."

"நோ நோ... அதுலல்லாம் அவன் மீண்டும் வந்துடுவான்."

நான் இந்தத் தடவை பண்ணப் போறது மாந்திரீகம்."

"மாந்திரீகம் நிஜமாண்ணா?"

"அனுபவிக்கறவங்களை தவிர மற்றவங்களுக்கு அது பொய் புதிர் எல்லாம்."

"நிஜமாவா?"

"ஆமாம். இன்னும் சில நாள்தான். அவன் அவனோட வியாபாரம் எல்லாம் இனி கந்தல்."

"அண்ணா பார்த்து. அது திரும்பி வந்து தாக்கும்னு கதைல படிச்சிருக்கேன்."

"ஐடோன்ட் கேர். சந்திரசேகர் ஒழியணும் அதான் என் லட்சியம்."

"எனக்காக நீ இவ்வளவு கஷ்டப்படணுமா?"

"உனக்காக மட்டுமில்லை மௌஷ்மி. அந்த துரோகத்தை ஏனோ என்னால ஜீரணிக்கவே முடியலை."

"பார்த்து செயல்படுண்ணா."

"நோ பிராப்ளம்-எனக்கு ஆயிரம் கண் மௌஷ்மி. ஓ.கே. குட்நைட்!"

"குட் நைட் அண்ணா."

-சதுர்வேதி சற்று மன நிம்மதி அடைந்தவனாக படுக்கையில் தலையணையை கட்டிக் கொண்டபோது தொலைபேசி சிணுங்கியது, காது கொடுத்த போது கள்ளந்திரி நம்பூதிரியை பேசி முடித்துவிட்டதை தேவராஜ் சொல்லி நிறுத்தினான்.



சதுர்வேதியிடம் இலேசான மகிழ்ச்சி.

# 12

கண் விழித்த சந்திரசேகருக்கு முதல் நாள் சம்பவமும் பேச்சும் ஏதோ ஒரு நிழல் அனுபவம் போல இருந்தது.

அறையை விட்டு வெளியே வந்த நொடியில் பி.ஏ. பார்த்த பார்வையில் பயங்கர பரிதாபம் தெரிந்தது.

"குட்மார்னிங் சார்!"

"குட்மார்னிங் என்னய்யா காலங் கார்த்தால."

"நேற்றைய தினம் உங்களை பிடிக்கவே முடியலை. நிறைய விஷயங்கள் கொலாப்ஸ் ஆச்சி."

"ஓ-கே. ஓ.கே. இன்னிக்கு எல்லாத்தையும் முடிச்சுடலாம் யெஸ்டர்டே ஐ வாஸ் மூட் அவுட். ஆமாம் பிள்ளை எங்கே?"

"இன்னும் வரலை சார்."

"என்னை உடனே பார்க்கச் சொல்!"

-பேசிவிட்டு சந்திரசேகர் பாத்ரூமுக்குள் நுழைந்து கொள்ள பி.ஏ. பிள்ளைக்கு போன் பேட்டு விட்டு விழி விரிய திகைத்துப் போனான்.

பாத்ரூமை விட்டு முகத்தை துடைத்தபடி வெளியே வந்த சந்திரசேகரிடம் தன் திகைப்பை கூறுகிறான். "சார் பிள்ளைக்கு திடீர்னு கை கால் செயலிழந்து போச்சாம். யாரோ ஒரு மாந்திரீகனோட வேலையாம்."

-பி.ஏ.வின் பேச்சைக் கேட்ட மறுகணம் சந்திரசேகர் நெஞ்சில் கோலி அடைத்துக் கொண்டது. பகீர் உணர்ச்சியில் உடம்பெல்லாம் நடுங்கியது.

சுதாரித்துக் கொண்டு சமாளித்து பிள்ளையை அவர் வீட்டில் போய் பார்த்தபோது பயமும் நடுக்கமும் பல மடங்காகிவிட்டது.

பிள்ளை கோணமாணலாய் தெரிந்தார். பேச்சில் கூட குழறல்.

"சார் நம்பூதிரி முதல்ல என்னை எச்சரிச்சிருக்கான். அடுத்து நீங்கதான். பட்டத்திரிகிட்டையும் கோவிச்சுகிட்டு வந்துட்டீங்க. வரப்போற சூன்யத் தொல்லைகிட்ட இருந்து எப்படி தப்பிச்சு போறீங்க."

-சந்திரசேகருக்கு அப்போதுதான் தன் தவறும் விஷயத்தின் விபரீதமும் தெரியவந்தது.

தன்னை துரோகி என்று சொன்னதில் தான் அத்தனை உணர்ச்சிவசப்பட்டு திரும்பியதெல்லாம் சுத்த மூளை கெட்ட செயல் என்று தோன்றியது.

"யோவ் இப்ப என்ன பண்ணச் சொல்றே?"

"போய் பட்டத்திரி கால்ல விழுங்க. வழிசொல்வான்."

"சரிய்யா போறேன்."

-சந்திரசேகரின் கார் அங்கிருந்து பட்டத்திரி குடிசையைத்தான் குறி வைத்தது.

"எப்படி என் சாதுர்யம்?"-கேட்டுக் கொண்டிருப்பவன் நம்பூதிரி. அதற்காக மகிழ்ந்து தலையசைக்கிறான் சதுர்வேதி.

"ஆ... பாலகிருஷ்ண பிள்ளையை கட்டிப்போட்டு அவனோட தலைமுடி சுலபமாயிட்டு கிட்டியதால் சுலபமாக்கி கட்டி சந்திரசேகர் கேசம் கிட்டிட்டெங்கில் அவனும் உயிருள்ள சவமாகும்."

"எப்படியும் கொண்டு வந்து தரேன் நம்பூதிரி. அவன் செயல் இழக்கணும் அதான் எங்களுக்கு வேணும்."



"பதிலுக்கு எனக்கு எது தரும்?"

"எதை கேட்டாலும் தருவேன். எவ்வளவு லட்சம் வேணும்?"

"லட்சம் வேணாம் சொர்ணம் வேணும். தருமோ?"

-நம்பூதிரியின் கேள்வி முன் பிரேக் பிடித்த மாதிரி மாதிரி நிற்கிறான் சதுர்வேதி.

"தங்கம் என்கிட்ட இல்லை நம்பூதிரி. சந்திரசேகர் தான் வெச்சிருக்கான்." சமாளிக்கிறான்.

"வேண்டாம். இது பகவதி சன்னிதானம். கள்ளம் பறையாண்டா. எனிக்கு நீ ஒரு பங்கு தங்கம் தந்தால் பகவதி உனக்கு நூறு பங்கு தருவாள் அறியுமோ?"

நம்பூதிரியின் பேச்சுக்கு தேவராஜும் துணை போகிறான்.

"சார். சொத்த கித்த வித்தாவது தங்கம் கொடுங்க. நம்பூதிரி அந்த பட்டத்திரி மாதிரி கிடையாது. பயங்கர ஆள். சொன்ன மாதிரியே செய்து தருவான்."

சதுர்வேதி தயங்கி தயங்கி கேட்கிறான்.

"எவ்வளவு தங்கம் வேணும் நம்பூதிரி?"

"நான் சொர்ணாபிஷேகம் செய்யணும். பகவதிக்கு சொர்ணாபிஷேகம்! ஆகையால் உனது தங்கம் அவ்வளவும் தா. அதை நான் அபிஷேகம் செய்து பின்ன திருப்பித் தரும். எனிக்கு பகவதி வரம் தந்தால் மதி."

"அவ்வளவு தங்கமும்னா?"

"ரகசியமாயிட்டு புதைச்ச வெச்ச அவ்வளவு தங்கமும்."

-சதுர்வேதி அதை கேட்டு ஆடிப்போய்விட்டான். 'நான் புதைத்து வைத்திருப்பது இவனுக்கு எப்படித் தெரியும்?'

பகவதி சொன்னதாக நம்பூதிரி கூறிவிட்டு "உன்
ஜாதகத்தையே சொல்லவா?" என்று கேட்கவும் சதுர்வேதி
அரண்டு போகிறான்.

"வேண்டாம் வேண்டாம்"-என்று பதைக்கிறான்.
சந்திரசேகரைப் போல சேகரித்த கஸ்டம்ஸ் கள்ளத்
தங்கத்தை இந்த நம்பூதிரியிடம் கொண்டு வந்து தருவதா?

"நம்பிக்கையில்லையெங்கில் போய்க்கோ..."

-நம்பூதிரியின் பதில் சதுர்வேதிக்குள் புதிய தெம்பைத்
தருகிறது.

கிட்டதட்ட இதே நிலையில் சந்திரசேகரும் பட்டத்திரி
முன் இப்படித்தான் திணறி ஒரு வகையாக தெம்படைந்த
வராக தெரிகிறார். ஆனால் பட்டத்திரியின் பதிலில் சில
விஷயங்கள் வேறு மாதிரி!

"சந்திரசேகர் நம்பூதிரி என் குரு. அவரோட கட்டுக்களை
என்னால அவிழ்க்க முடியாது. ஆனா ஒண்ணு பண்ண
முடியும் உன் தங்கத்தால சாத்தானுக்கு அபிஷேகம் செய்து
அவர் சூன்யம் உன்னை தாக்காமல் செய்ய என்னால்
முடியும். அதை உடனே செய்யணும். ரொம்பவும் அவசரம்!
இல்லேன்னா உன் கையும் காலும் போயிடும்."

"போகக்கூடாது. போகக்கூடாது."

"அப்படின்னா உன்கிட்ட இருக்கற பதுக்கல் தங்கத்தை
கொண்டுவா."

"பதுக்கல் தங்கமா?"

"சந்திரசேகர் இன்னும் பொய் சொல்லாதே. பொய்
சாத்தானுக்கு பிடிக்காது. உன்கிட்ட தங்கம் இருக்கறதை
அது என்கிட்ட சொல்லிடிச்சு. எங்க இருக்கும்னும் எனக்கு
தெரியும். தங்கத்தை பாதுகாக்கப் போய் உன்னை



இழந்துடாதே! வழியில் யாரும் கை காட்டினா வண்டியை
நிறுத்தாதே நிறுத்தினால் மரணம்தான் ஜாக்ரதை." அதை
கேட்டு சற்று பயந்து சந்திரசேகர் அரை மனதாய்
கிளம்புகிறார்.

-காரில் நிதானமாக வேகம்...

வகை தொகையில்லாமல் சிக்கிக் கொண்டதுபோல் ஒரு
நினைப்பு வாழ்வில் சரியான திசைக்கு வந்துவிட்டதாக
நினைத்தது தவறோ?

துரோகங்களில் தொடங்கும் வாழ்க்கை இப்படித்தான்
போய்ச் சிக்கிக் கொள்ளுமோ?

பயணத்தின் வேளையில் பலவிதமான கேள்விகள் எதிரே
கண்மாய்க் கரை மேட்டுக் குடிசை வாசி நடுப்பாதையில்
நின்று இப்போது மறிக்க ஆரம்பிக்கிறான்.

பட்டத்திரி சொன்னது போலவே ஒருவன், நம்பூதிரியின்
ஏவலன். பகீர் உணர்ச்சி பற்றி எரிய காரை நிறுத்தாமல்,

வளைத்து ஓட்டி அவனைத் தாண்டிய பிறகு பயம்
அடங்கவில்லை. பின்னாலோ அவன் துரத்திக் கொண்டு
ஓடி வருகிறான்.

ஆக்சிலேட்டர் அழுந்துகிறது வேகமாக...

சக்கரங்களில் பேய்கள் குடி புகுந்து கொண்டது போன்ற
வேகம். ஓடி வருபவன் கண்ணை விட்டே காணாமல்
போகிறான்.

சந்திரசேகருக்கு அழுகையாக வருகிறது.

தப்பிக்க முடியாமல் அகப்பட்டுக் கொண்ட மாதிரி ஒரு
பிரமை தட்டுகிறது.

போகட்டும்.

தங்கம் போனால் போகட்டும்.

உயிர் பிழைத்து இருக்கும் சொத்தை காபந்து செய்தால் போதும்.

தங்கத்தை தான் ரகசியமாக விலைக்கு வாங்குவதாக போலீஸ் தன்னை சந்தேகப்படுவது சந்திரசேகருக்கு தெரியும்.

அதன் காரணமாக கிட்டதட்ட நான்கு வருடங்களாக வெளியே எடுத்து பார்க்கக்கூட இல்லை. தீரஜிடம் பறித்த தங்கத்தை! அதை முதலாக வைத்து தொழில் தொடங்கி பின்னர் அதை மீட்டு பதுக்கிய பிறகு இன்றுதான் அதை தொட்டுப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அதுவும் பட்டத்திரியால்!

சதுர்வேதிகூட தனது ரகசிய சேமிப்பை அதோ சூட்கேசில் அடுக்கில் கொண்டிருக்கிறான்.

யாரை யார் வெல்லப்போவது?

## 13

அர்த்த ராத்திரி!

ஆந்தை அலறி முடிக்க, பிணநாய் குரைத்துக் களைக்க வெந்தும் வேகாத பிணப்புகையின் நடுவில் சந்திரசேகர் பெட்டி நிறைய தங்கத்தோடு தூக்கிச் செல்ல ஒரு கையால் முடியவில்லை. நரம்பு புடைத்துக்கொண்டு தோள்பட்டை கதறுகிறது.

சுடுகாட்டின் நடுபரப்பில் திகுதிகுக்கும் தீப்பந்த ஒளியின் நடுவில் சாத்தன் விக்கிரகத்தோடு பட்டத்திரி.

''வா சந்திரசேகர். வா'' அவனிடம் அழைப்பொலி. சந்திரசேகர் அருகில் போய் நின்று தங்கப்பெட்டியை கீழே வைத்து கைகளை உதறி விட்டுக் கொள்ளவும் பட்டத்திரி ஆழமாக பார்க்கிறான் சந்திரசேகரை!



''எடுத்துக்கோ பட்டத்திரி. என்னை காப்பாத்து. பிள்ளையையும் காப்பாத்து. அந்த சூன்யம் என்னை நெருங்கிட்ட மாதிரி. ஒரு பிரமை என்னை படுத்திகிட்டே இருக்கு.''

-பட்டத்திரி உடனே கண்களை மூடி சிறிது தியானித்து விட்டு வருத்தம் தோய கண் திறக்கிறான்.

''என்ன பட்டத்திரி.''

''இது திருட்டுத் தங்கமா? நீ உழைச்சு சம்பாதிச்சது இல்லையா?''

''எதுக்கு கேக்கறே?''

''சாத்தானுக்கு உழைச்ச தங்கம்தான் வேணுமாம். குறுக்கு வழி விஷயமெல்லாம் பிடிக்காது.''

''தங்கத்துல சொக்கத் தங்கம், கலப்படத்தங்கம்னு தான் உண்டு. திருட்டுத் தங்கம் திருடாத தங்கம் கிடையாது பட்டத்திரி.''

''இது நேர்வழியில வந்ததா. கள்ளத்தனமா வந்ததா அதைச் சொல்.''

''நேர்வழியில இவ்வளவு தங்கத்தை யாரலையும் சம்பாதிக்க முடியாது. குறுக்கு வழியிலதான் வந்தது.''

-சந்திரசேகர் சொல்லி முடிக்கவும் ''சபாஷ்'' என்று ஒரு குரல் கேட்டது.

பளிச்சென்று ராட்சத விளக்குகள் சுற்றிலும் ஒளிவிட சுடுகாட்டு மரம் பின்னால் இருந்தெல்லாம் போலீஸ் உருவங்கள்.

பிரதானமாய் க்ரைம் பிராஞ்ச் இன்ஸ்பெக்டர் ரவிச்சந்திரன்!

சந்திரசேகர் அந்த வினாடி நிற்கும் நிலப்பரப்பு நழுவுவதை உணருகிறார்.

பக்கத்து மயானத்தில் சதுர்வேதிக்கும் இதே கதி!

## 14

“என்ன சார் சந்திரசேகர் ஒழுங்கா வாக்குமூலம் கொடுத்துட்டாரா?”-கேட்பவர் ஸ்பெஷல் சிஐடி ரங்கராவ்!

விதவிதமான வேஷங்கள் போடுவதில் நடிகர் திலகமாய் மாறி விடுவதில் டிபார்ட்மெண்டே போற்றும் கில்லாடி.

பட்டத்திரி வேஷம் போட்டு உடும்பு ஆந்தையுடன் குடும்பம் நடத்தி படு கிலியை ஏற்படுத்தியவர்.

“சதுர்வேதியும் எல்லாத்தையும் ஒத்துகிட்டான்.”

-என்றபடி முன் வருபவர் நம்பூதிரியாக நடித்த நரசிம்மன்.

இந்த பட்டத்திரி நம்பூதிரிகளுக்கு பக்கபலமாக அதே தேவராஜ், பாலகிருஷ்ண பிள்ளை.

சதுர்வேதி சந்திரசேகரை குறிவைத்து தப்பு செய்யத் தொடங்கி விட்டதை எதார்த்தமாய் தன் மைத்துனர் நரசிம்மனிடம் கூற நரசிம்மனும் அவர்களை போலீஸ் கண்காணித்துக் கொண்டிருப்பதை கூற இருவரையும் பிடிக்க சரியான வலை மாந்திரீகம் மட்டுமே என்கிற முடிவை எடுத்து அதை செயல்படுத்த நுட்பமாக திட்டமிட்டதை இப்போது நினைத்தாலும் ஆச்சரியமாக இருக்கிறது.



சந்திரசேகரின் வேலைக்காரராக பாலகிருஷ்ண பிள்ளை இருந்த போதிலும் நியாயத்திற்காக அவர் போலீசுக்கு ஒத்துழைக்க முன் வந்தது பாவம் சந்திரசேகரின் துரதிர்ஷ்டமே.

சந்திரசேகருக்கும், சதுர்வேதிக்கும் மாந்திரீக நம்பிக்கை ஏற்பட அவர்கள் வியாபாரத்தில் ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தி, பத்திரிகையில் எழுத வைத்து, பஜன்லால் சேட் உதவியை எல்லாம் கோரி போலீஸ் போட்ட ராஜபாட்டையில பிசிறடித்த விஷயம் சதுர்வேதியின் மாமா ஆதித்யாவின் மரணம்தான்!

இந்த மாந்திரீக தந்திரத்தை ஒரு நிஜமென ஆழமாக நம்பி விட்டவர் மனச் சிதைவால் காரை மிக வேகமாக செலுத்தி விபத்துக்குள்ளானதை நினைத்தால் இப்போது கஸ்டம்ஸ் இன்ஸ்பெக்டர் ஹிதாயத்துக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது.

தன் துறையில் சிலர் இதுபோல் தவறான பாதையில் செய்வது தெரிந்தும் தடுக்க முடியவில்லை. திருத்த முடியவில்லை.

தீரஜும் அதற்கு விதிவிலக்கில்லை. அவன் திகார் ஜெயிலில் சதுர்வேதியிடம் பேசியதில் தான் இந்த வேலை எடுத்துக் கொள்ளும் முதல் விதை ஹிதாயத்துக்கு விழுந்தது. ஏற்கனவே தீரஜ்மேல் டிபார்ட்மெண்ட்டுக்கு இருந்த சந்தேகப் பார்வை திகார் ஜெயிலிலும் தொடர்ந்தது. ஒட்டுக் கேட்டு தகவல் சொன்னார்.

சதுர்வேதியை உடனே போலீஸ் வளையம் கவனிக்கத் தொடங்கிவிட்டது. அவனை பட்டத்திரியிடம் செலுத்தி, அவனைத் தொடர்ந்து சந்திரசேகரை செலுத்தி அவர்கள் வாயாலேயே உண்மையை கக்க வைத்துவிட்ட இந்த கேஸ்

உண்மையிலேயே போலீஸ் வரலாற்றில் ஒரு மைல் கல்தான்.

அடி, உதை, சித்ரவதை என்கிற என்கொயரி பாணிகளை இன்றைய குற்றவாளிகள் சாதாரணமாக எடுத்துக் கொள்ளத் தொடங்கிவிட்டார்கள்.

போலீஸ் கூட்டத்திலும் கறுப்பு ஆடுகள் இவர்களை தப்பிக்க விட்டோ, இல்லை கொன்றோ கூலிக்கு மாரடித்து விடுவதால் புதுப்புது பாதைகளில் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது.

கோர்ட்டிலும் இவர்களை மீட்க கறுப்புச் சட்டை கூட்டம். எல்லாம் பணம் படுத்தும் பாடு.

ஆதாரங்கள் அசைக்க முடியாதபடி தேவைப்படுகிறது.

ரங்கராவ்தான் மாந்தீரிக வலைக்கு ஐடியா கொடுத்தவர். மற்றவர்கள் ஒத்துழைத்தார்கள்.

விஷயம் சுபமாக முடிந்திருக்கிறது.

பயமூட்டும் மயானதுக்கு கூட இதில் மகிழ்ச்சி போலும். அதோ அந்த மயான மரங்கள் தான் காற்றில் என்னமாய் தலையாட்டுகின்றன!

முற்றிற்று